உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—(திருக்குறள்)

தொகுதி ௧௧. Vol—XI. } சித்தார்த்தி-ஹு ஆடி, ஆவணிமீ AUG., SEPTEMBER 1919. { பகுதி ௭-௮. No. 7—8.

ஸ்ரீ:

தேசபாஷைமூலம் கல்விபயிற்றல்.

ஸ்ரீமாந் இராமலிங்கரெட்டியார் உபந்யாஸம்.

சென்னை, கோகலே மண்டபத்தில், மைசூர் கல்வியிலாகாத்தலைவரான ஸ்ரீமான் சி. இராமலிங்கரெட்டியார் என்பவர், "சுதேச பாஷைகள் வாயிலாகக் கல்விகற்பித்தல்" என்னும் ஓர் அரிய உபந்யாசத்தைச் செய்து முடித்தார். அவ்வமயம் நீதிபதி கனம் தி. வி. சேஷகிரி ஐயர் அவர்கள் தலைமைத்தானம் வகித்திருந்தார்கள். முக்யமாக வாலிபர்களும் மாணவர்களும் நிரம்பியிருந்தனர்.

தலைவர் முன்னுரை ஸாரம்.

"நானும் ஸ்ரீமான் ரெட்டியார் அவர்களும், கல்கத்தா சர்வகலா சாலைக்கமிஷன் ஏற்படுவதற்கு முன்னரே கல்வி விஷயத்தில் சேர்ந்து உழைத்து வருகின்றோம். ஸ்ரீமான் ரெட்டியார் அவர்கள் கல்வி விஷயத்தில் மிகுந்த அநுபவமும் ஆழ்ந்த ஆராய்ச்சியும் உடையவர்கள். அமெரிக்கா இங்கிலாந்து முதலிய நாடுகட்குச் சென்று யாத்திரை விசேஷமாகச் செய்து, அங்குற்ற நவமான கல்விமுறைகளை ஆராய்ச்சி செய்திருக்கின்றார்கள். கல்வி விஷயமாக ஒரு நூலும் எழுதியிருக்கின்றார்கள். மைசூர் ஸமஸ்தானத்துக்கு ஒரு அதிஷ்ட

பலனாக இவர்கள் கிடைத்திருக்கின்றார்கள். நாங்கள் இருவருமாகக் கலந்து யோசித்து முடிவுக்குக் கொண்டுவந்தவை அநேகவிஷயங்கள் ஷை சர்வகலாசாலையில் கமிஷன் அறிக்கையில் முடிவுசெய்யப்பட்டிருக்கின்றன."

உபந்யாஸம்.

"எனது நண்பர் அரங்கநாதத்தின் வேண்டுகோட்கிணங்கியும் கல்வி விஷயத்தில் எனக்குள்ள அநுதாபத்தாலும், இன்றையான் இவ்விஷயத்தைப்பேச முன் வந்தேன். கல்வி என்பது தன் மட்டிலேயே ஒருமுடிவாகாது. வாழ்க்கையில் அது பயன்படும் முறையே மிகவும் முக்யமானது. நான் சுதேசபாஷைகளுக்காகப் பரிந்து பேச வரவில்லை. வாலிபர்கள் அதைப்பற்றி வாதம் செய்து முடிவு செய்ய வேண்டும்.

சுதேசபாஷைகள் வாயிலாகக் கல்விகற்றலே மிகவும் இயற்கையான முறையாகும். இவ்விஷயத்தைப்பற்றி வற்புறுத்தல் எந்த நாட்டிலும் அவசியமில்லை. இங்கிலாந்திலாவது பிரான்சிலாவது இதைப்பற்றி வற்புறுத்துவது அவசியமாயிருக்கின்றதா? ஆனால் நமது நாட்டில் இதைப்பற்றிப்பேசவேண்டியது அவசியமாக இருக்கின்றது. இது ஒரு அசாதாரணமான நிலைமையேயாகும். அன்னியபாஷையான ஆங்கிலத்தின் வாயிலாகக்கல்வி போதிக்கும் தற்கால முறையில் உள்ளகுறைகள் பல. அவற்றைப் பலவாயிலாக ஆராயலாம். கல்வியை ஒரு அன்னிய பாஷையின் வாயிலாகப் பயிலல் மிகவும் கஷ்டமாயிருக்கின்றது. இதைவிடப் பெரிய தீமை வேறில்லை, சென்ற 60—70 வருஷகாலங்களாக இம்முறை நடந்து வருகின்றது. பொதுஜனவகுப்பில் கல்வி பரவவேயில்லை. படித்த சிலரும் பெரிதும் அறிவைப்பெற்றுவிடவுமில்லை. நாடெங்கும் இது எதிரொலியாயிருக்கின்றது. ஜனங்கள் தாங்களே யோசனைசெய்யும் திடம்போய்விட்டது. மனஉருக்கத்தையே நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். மனத்தைப்பெரிதும் உருக்கக்கூடிய பாடல்களும் கவிகளும் நமது தாய்ப்பாஷைகளில் மிகுதியாகஇருக்கின்றன. அன்

னிய பாஷையான இங்கிலீஷ் பாடல்களில் எதனையாவது படித்து உங்கள் மனம் உருக்கமடைந்ததுண்டா? பாரதம் இராமாயணத்தைப்படிப்பதால் மிகுந்த நன்மைகள் ஏற்படுகின்றன.

அன்னிய பாஷையான ஆங்கிலத்தின் வாயிலாகக் கல்வி பயில்வதால் ஹிருதயம் பாழாகிவிடுகின்றது. இரத்தத்திற்குப் பதிலாகப் புழுதியை அது நிரப்புகின்றது. தற்காலமுறை அசாதாரணமான முறையாக இருக்கின்றது. சுதேசபாஷைகள் வாயிலாகக் கல்வி பயிற்றுவதென்றால், அதற்குச் சுதேசபாஷைகளில் தகுந்தபுஸ்தகங்கள் இல்லையேயென்று குறைகூறுகின்றார்கள். அது முற்றிலும் தவறு.

மிடில் ஸ்கூல் (Middle school) சம்பந்தப்பட்டவரை சுதேச பாஷை வாயிலாகக் கல்விபயிற்றும் விஷயத்தில் அபிப்பிராயம் ஏகோபித்ததாக இருக்கின்றது. ஆங்கிலம் இரண்டாவது பாஷையாகப் பயிற்றப்படவேண்டும். காலேஜ் வகுப்புகளில் ஆங்கிலபாஷை வாயிலாகக் கல்வி பயிற்றப்படவேண்டுமென்பது ஏகோபித்த முடிவாயிருக்கின்றது. ஹைஸ்கூல் வகுப்புகள் விஷயத்தில்மட்டும்தான் ஒருமுடிவு இன்னும் ஏற்படவில்லை. (டெக்ஸ்டு) புஸ்தகங்கள் சுதேசபாஷைகளில் இல்லையென்று தற்கால அநுபவமுள்ளவர்கள் சொல்லமாட்டார்கள். வங்காளி தெலுங்கு கன்னடம் மராத்தி முதலிய இந்தப் பாஷைகள் எவ்வளவோ முன்னிலை யடைந்து வருகின்றன. ஒரு பாஷையில் முடியும் காரியம் எந்தப்பாஷையிலும் முடியும். பி. ஏ. வகுப்புமாணவர்கட்கு நான் சரித்திர உபந்யாஸம் செய்தபொழுது ஸ்ரீமான் கே. வி. லக்ஷ்மணராவ் எழுதிய சரித்திர நூல்களை ஆதாரமாகக்கொண்டே உபந்யாஸம் செய்துளேன். அதனாலேயே அவர்கள் சொல்லும் முறை ஆதாரமற்றது.

இன்னும் ஒருகுறை சொல்லுகிறார்கள்.

நமது நாட்டில் அநேக பாஷைகள் இருக்கின்றனவென்றும், அதனால் இங்கிலீஷ்தான் வேண்டுமென்றும் சொல்லுகின்றார்கள். இருந்தால் என்ன? இது என்ன தர்க்க முறையாகும்? ஒவ்வொரு

பாஷையை முக்கியமான பெரியபாஷை என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். தமிழ்பாஷை பேசுவோர், சுமார் இரண்டு அல்லது மூன்றுகோடிப்பேர் இருக்கின்றார்கள்; தெலுங்குபேசுவோர் இரண்டு கோடி; வங்காளம் பேசுவோர் ஆறுகோடி; ஹிந்தி பேசுவோர் எட்டு அல்லது ஒன்பதுகோடி; இவையெல்லாம் சிறிய பாஷைகளல்ல. அரும்பெருங் காவியங்களைக்கொண்ட உயர்ந்த பாஷைகளேயாம். நமக்கு ஆங்கிலபாஷை தாய்ப்பாஷையாகவோ ஸ்விசாரத் தாய்பாஷையாகவோ ஆக இன்னும் எத்தனை யுகம் செல்லும்.

ஆங்கிலச்சிறுவர்களும் ஜர்மன் சிறுவர்களும் சுமார் பதினான்கு வயதுக்குள் நமது பி. ஏ. பட்டாத்தாரிகளைவிட அதிக ஞானத்தை படைந்துவிடுகின்றார்கள். இதற்குக்காரணம் அவர்கள் தங்கள் தாய்ப் பாஷைகள் வாயிலாகக் கல்வி பயில்வதேயாகும். நமது சிறுவர்கள் சிறுபிராயத்தில் சக்திபை விஞ்க்கவேண்டியதா யிருக்கின்றது. அன்னியபாஷை வாயிலாகப் பயில்வதால் ஞானத்தை எளிதாகப்பெற முடியவில்லை. கல்வி பொதுஜனங்களுக்குள் பரவுவதற்கும் இது தடையாயிருக்கின்றது.

(இதனைபொட்டி, அவர் சென்னைச்சர்வகலாசாலையின் தாமதப் போக்கைக் குறிப்பிட்டு அதனைச் சூரியனைச்சுற்றி மிகுந்த தாமதமாகச் செல்லும் கேது சனி யென்ற கிரஹங்களுடன் ஒப்பிட்டார்.)

ஆரம்பக் கல்வியில் ஆங்கிலபாஷை வாயிலாகக் கல்விபயிற்றும் முறை கேடானதென்று கல்கத்தா சர்வகலாசாலைக் கமிஷன் அறிக்கையும் ஒப்புக்கொள்ளுகின்றது. ஆங்கிலபாஷை (பாஷை யென்ற முறையில்) பயிற்றுவதற்கே தகுதியாகியபோதகர்கள் கிடைக்கவில்லை அவ்வாறானால், எல்லாவிஷயங்களையும் ஆங்கிலபாஷை வாயிலாகப் போதிப்பதற்குப் போதகர்கள் எங்கே கிடைப்பார்கள். இந்தமுறை நாட்டில் கல்விபெருகுவதற்கு இடையூறாகவிருக்கின்றது.

(எலிமெண்டரி) ஆரம்பக்கல்வி வரையில் ஜனங்கட்குப் பயிற்றினால் போதுமென்று இதுவரை அதிகாரிகள் கருதிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போதோ (ஹைஸ்கூல்) உயர்தரக்கல்விவரை கொடுக்

கப்படவேண்டுமென்ற அபிப்பிராயம் ஏற்பட்டுவருகின்றது. எனவே, பொது ஜனங்கட்கு ஐஸ்கூல் கல்விவரை கற்பிக்கவேண்டியது அவசியமேயாகும்.

தாழ்ந்த வகுப்பாரின் முன்னேற்றத்திற்கும் இந்த முறை இடையூறாயிருக்கின்றது

வங்காளத்தில் வங்காளபாஷை நன்றாய் விருத்தியடைந்து வருகின்றது. பம்பாயிலோ ஒரு பத்திரிகையைத்தவிர மற்றவையெல்லாம் சுதேசபாஷைகளில் நடந்துவருகின்றன. சென்னையில்மட்டும் தானு இது முடியாதகாரியம். ஆசாரச்சீர்திருத்தத்திற்கும் ஆங்கிலத்தால் பயனில்லை. சுதேசபாஷையினாலேயே அது முன்னுக்கு வரவேண்டும். நமது நாட்டில் உள்ளகுறைகளைத் தீர்க்க நமது நாட்டுப் பாஷைகளின் உதவியாலேயே முயல வேண்டும். பொது ஜனங்களுக்குள் எந்த முயற்சியும் சுதேசபாஷைகளின் உதவியாலேயே நடைபெறவேண்டும். ஒவ்வொரு நூதனமான கொள்கையும் சுதேசபாஷைவாயிலாகவேதான் பரவும்.

இப்போது அரசாங்கத்தார் நம்மவர்கள் சொல்லும் குறைகளுக்குச் செவிசாய்க்கத் தொடங்கியிருக்கின்றார்கள். இது ஒரு நல்லகாலமே ஆனால் இவ்விஷயத்தில் அரசாங்கத்தார் அதிகமாக ஒன்றுஞ் செய்ய முடியாது. பொதுஜனங்களே முயற்சி செய்யவேண்டும். சுதேசபாஷைகள் வாயிலாகவே நமது நாடு முன்னேற்ற மடையவேண்டும். (இதுவே அவர்செய்த உபந்யாஸத்தின் சாரம்)

தலைவர் முடிவுரைச் சுருக்கம்.

ஸ்ரீமான் ரெட்டியாரின் ரசம்பொருந்திய தேசாபிமானம் வாய்ந்த பேச்சைத் தலைவர் மெச்சினார். அவர் கூறிய விஷயத்தில் எல்லோரும் கிளர்ச்சிசெய்து முயற்சிசெய்ய வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். சுதேசபாஷைப் பத்திரிகைகள் வாயிலாகவே தேசம் முன்னிலை அடையவேண்டும். அரசியல் முன்னேற்றமும் அவற்றால்தான் ஏற்படவேண்டும். சிலவருஷங்கட்கு முன்வரை வக்கீல்வகுப்

பாரும் வேறுசிலருமே அரசியல் விஷயங்களில் தலையிட்டு வந்தார்கள் இப்பொழுதோ விவசாயிகள் வியாபாரிகள் முதலிய எல்லாவருப்பாரும் தலையிட்டு உழைக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். சுதேசபாஷை வாயிலாகப் போதித்தால் விவசாயிகள் விஷயங்களை எளிதில் உணர்ந்துகொண்டு வேலை செய்வார்கள். இவ்விஷயத்தில் எல்லோரும் உழைக்கவேண்டியது அவசியம். மாணவர்கள் தங்கள் பெற்றோர்களிடம் சொல்லி, அவர்கள் மூலமாக வேலைசெய்யவேண்டும். அரசியல் விவகாரங்களில் உழைப்பவர்கட்கு இவ்விஷயத்தில் வேலைசெய்ய அவகாசம் இராது. எனவே, மற்றவர்களே இதில் தலையிட்டு உழைக்கவேண்டும் தாய்ப்பாஷை வாயிலாகக் கல்வி போதித்தாலன்றிச் சிறுவர்களின் சௌக்கியத்துக்கு இடையூறு ஏற்பட்டு அவர்களுக்கு அறிவு விருத்தியாக வழியில்லை. தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால் தாய்ப்பாஷை வாயிலாகக் கல்வி பயிற்றப்படவேண்டும். இவ்வாறு பேசிவிட்டு அக்கிராஸனர் உபந்யாஸகருக்கு வந்தனமளித்தார். அத்துடன் கூட்டம் நிறைவேறியது.

தேசபக்தன்.

குறிப்பு:—மேற்படி பாரவில் தலையங்கங்களிலெல்லாம் "தேசபாஷை மூலமே கல்வி பயிற்றப்படல்வேண்டும் என்றும் இம்முறையைப் பலமேதாவிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்றும் பன்முறை வற்புறுத்தியிருக்கிறோம். அவற்றிற்கு இவ்விருவரும் சான்றுவார்,

பத்திராதிபர்.

இந்தியர்களை மரியாதையாய் நடத்தவேண்டும்.

காஞ்சிபுரத்திலுள்ள ரேவரண்டு ஜே. ஹெச். மக்லீன் என்னும் பாதிரியார், 'கிளாஸ்கோஹெரால்டு' என்ற பத்திரிகைக்கு ஓர் அரிய கடிதம் எழுதியிருக்கிறார். அதன் சுருக்கம் வருமாறு:—

"நான் கிளாஸ்கோவில் மாணவனாயிருந்தமையால், இந்தியா சம்பந்தமாகச் சில விஷயங்களை எழுதுகிறேன். சமீபத்தில் யாத்திரை

செய்தபொழுது, இவை என் மனத்தை உறுத்தின. இரண்டு விஷயங்கள் மிகவும் துயரத்தை உண்டுபண்ணின. முதலாவது இந்தியா நமக்கு எவ்வளவு தூரம் பயனுள்ளதாயிருக்கிறதென்ற முறையிலேயே அதனைக் கவனிக்கவேண்டுமென்று பரவியுள்ள கொள்கை. அநேகர் இவ்வாறு கருதியிருக்கிறார்கள் நமது முதலைப் போட்டு வியாபாரம் செய்து லாபம் சம்பாதிப்பதற்கும், நமது மக்களுக்கு உத்தியோகம் கிடைப்பதற்கும் வேண்டியதாயிருப்பதால்; இந்தியாவை நாம் வைத்திருக்கவேண்டுமென்று கருதுகிறார்கள். எனவே, இந்தியர்கள் அவர்கள் நிலையிலேயே இருக்கவேண்டும். நமது உதவியில்லாமல் காரியங்களை நடத்துவதற்குத் திறமையளிக்கக்கூடிய கல்வி அவர்களுக்குக் கிடைக்காமலிருக்கும்படிக்கும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நமது ஜனங்கள் கருதுகிறார்கள். இது முதல விஷயம்.

என்னைத்துன்புறுத்திய இரண்டாவது விஷயம்; கப்பலில் இருந்த இந்தியர் விஷயத்தில் அநேகப் பிரயாணிகள் முரட்டுத்தனமாக நடந்து கொண்டமை. நமது நாட்டில் உள்ள அவர்களில் அநேகர், சர்வகலாசாலைகளிற் செம்மையாகப் படித்துவிட்டுத் தங்கள் நாட்டுக்குத் திரும்பிச்செல்லுகிற வாலிபர்கள், நாகரீகத்திலும் அறிவிலும் நம்மவர்களில் அநேகரைவிட அவர்கள் மிகவும் சிறந்தவர்கள். அவ்வாறிருந்தும், பிரயாண முழுமையும்; அவர்கள் மனம் புண்படும்படி செப்பப்பட்டார்கள். அவர்கள் பக்கத்தில் உட்காருவதும், நித்திரை செய்வதும் நம்மவர்களுக்குப்பிரியமில்லை. அதனைநம்மவர்கள் வெளிப்படையாகக் காட்டிக்கொண்டார்கள். ‘கறுப்புப்பயல்கள்’ என்றும், ‘சுதேசிகள்’ என்றும், சொல்லி; அவர்களை வசைகூறியது அவர்கள் காதில் விழுந்திருக்கும். குவாரண்டைன் காம்பில் அவர்களுக்குத் தாழ்வான இடங்கள் கொடுக்கப்பட்டன. இவற்றையெல்லாம்பார்த்த அவர்களுக்குக் கோபம் பொங்குவது அதிசயமா?

சீர்திருத்த சம்பந்தமாக இப்பொழுது இந்தியாவை, உலகத்தார் அதிகமாகக் கவனித்து வருகிறார்கள். பிரிட்டிஷாரின் ஆதிக்

கத்துக்கு, எதிர்க் கட்சியின் தன்மையைப்பற்றி ஆச்சரியம் ஏற்பட்டிருக்கிறது. கப்பலில் சில இந்தியர்களுடன் பேசியபொழுது சுதந்தர விஷயத்தை எவ்வளவு தூரம் கொண்டுபோகிறார்களென்பதையறிந்து ஆச்சரியமடைந்தேன். ஆனால், அவர்கள் கஷ்டங்களை நோக்கினால், அவர்கள் உணர்ச்சியைப்பற்றி நான் அதிசயப்படவேண்டியதில்லை.

பிரயாணிகளில் பெரும்பாலார் சரியாய் நடந்துகொண்டார்கள். ஆனால், சிலரின் நடத்தையால் நமது நாட்டின் மதிப்புக் குறைந்து போகிறது இவ்வாறு நடப்பதைப் பார்த்து, மிகுந்த இழிவான கொள்கைகளும் கேவலமான நடத்தையுங்கொண்டுள்ள ஜனங்களின் மேற்பார்வையில் எக்காலத்திலும் இருக்கவேண்டியது அநாவசியமென்றும், மிகுந்த பழைய பெருமைவாய்ந்த இந்தியர்கள் கருதுவது அதிசயமல்ல. நமது சுயநன்மையை அவர்களிடம் மறைக்கமுடியுமா? இந்தியாவின் க்ஷேமத்தையே இங்கிலாந்து கருதுகிறதென்றும், அதற்குச் சுயநலநோக்கமொன்றுமில்லையென்றும் நான் அவர்களுக்கு விளக்கலாம். ஆனால், இவ்வாறுதான் நாம் அடிக்கடி கூறிவருகிறோம் என்பதை அறிந்துதான் நமது பிரயாணிகளின் வெளிப்படையான சுயநலச்செயல்கள் எனது உறுதியை வீணாக்கின.

நம்மவர்களிடம் இந்தியர் நிலைமையை என்னால் கூடியவரை பதியச்செய்தேன். இந்தியாவில் நமக்கு இடம் உண்டா? இல்லையா? என்பதை இந்தக் கறுப்புமனிதர்கள் விரைவில் கவனிக்கநேரிடுமென்றும், அவர்களை இம்மாதிரியாக நாம் நடத்துமுறை அப்பொழுது பாதிக்குமென்றும், நான் குறிப்பிட்டேன். இப்பொழுது நான் நாட்டார் எல்லோரையும் வேண்டிக்கொள்கிறேன் கிளாஸ்கோவிலிருந்து எத்தனையோ பேர் இந்தியாவுக்குப் போயிருக்கிறார்கள். பலவகைத் தொழில்களை நாடி அங்கேசெல்வோர் மரியாதையுள்ளவர்களாயும், நாகரிகம் உள்ளவர்களாயும் இருக்கவேண்டும் அவர்கள் போவதற்கு முன் சிறிது பயிற்சிபெறவேண்டும். அவர்கள் தாங்கள் செல்லும் நாட்டின் சரித்திரத்தையும், சமயத்தைப்பற்றியும் சிறிது ஞானம்

அவர் உற்றார் உறவினர்களும் பத்திமதிகூறி இவ்வில்லற தர்மத்தை நடத்திவரும்படிக்கு ராமதாஸை இறைஞ்சி வேண்டிக்கொண்டனர்.

12. எனினும் இவையாவும் பாலைவனத்து மழைபோல் பயனற்றுப்போயின. ராமதாஸுக்கோ எப்பொழுது நாம் சந்நியாசம் அடைவோம் என்ற எண்ணமே மேலிட்டிருந்தது. ஆகவே உற்றார் உறவினர் யாவரும் ராமதாஸ் தன் தீர்மானத்தை நிறைவேற்றத் தக்க சமயம் பார்த்திருப்பதையறிந்து, அவர் சந்நியாசியாய்ப் போவதன் முன் இல்லறத்தில் ஓர் அழகிய பெண்ணைக் கலியாணம் செய்யத் தீர்மானித்தனர். இத்தீர்மானத்தைக் கேள்வியுற்றவுடனே ராமதாஸ் வீட்டை விட்டு ஓடிப்போகவே, அவரது தமையனார் வெகுநேரம் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் வீட்டுக்குத் திரும்புகையில் சமீபத்தில் இருந்த ஏரிக்கரை மரநிழலில் கொஞ்சம் இளைப்பாறியபின் மறுபடியும் மனந்தளராமல் ராமதாஸை மற்றும் ஒரு தடவை உரக்கக் கூவினர். மரத்தின்மேல் யாரோ விடையளித்தமையால் யார் என்று மேல் நோக்குகையில் ஓர் மானிட உருவம் அக்குளத்தில் திடீரெனக் குதித்தது. ராமதாஸின் தமையனாரும் குளத்தில் குதித்து யாராயிருந்தாலும் அவரைக் காப்பாற்றவேண்டுமென்று தானும் உடனே ஜலத்தில் மூழ்கினார். ஜலத்தில் மூழ்கி அக்குளத்தில் குதித்த மானிட உருவத்தோடு வெளிக்கிளம்பினாலும் என்ன ஆச்சரியம்! அம்மனுஷன் ராமதாஸ் தான். இனிமையான வார்த்தைகளைச் சொல்லி வெகு கஷ்டத்துடன் ராமதாஸை அவர் தமையனார் வீட்டிற்கழைத்துவந்தார். இக்கோரமான செய்திக்குப் பிற்பாடு அவர் வீட்டில் கல்யாணத்தைப் பற்றிய ப்ரஸ்தாபமே கிடையாது. ஆகவே, இவர் தன் தாய் தமையன் சொற்படி நடந்து அமைதியுடன் இல்லத்திலிருந்து வந்தார்.

13. ஆனால், இவரது தாய்க்கு மாத்திரம் ஓர் அவா உண்டாயிருந்தது. அதாவது தன் குமாரன் ராமதாஸுக்கு ஓர் கலியாணம் செய்வித்து அவனது குழந்தைகள் விளையாடுவதையும் மழலையாடுவதையுங் கண்டு களித்து, தான் கண்மூடவேண்டுமென்னும் எண்ணந்தான். இது காரணம் பற்றி ஓர் நாள் தன் இளைய குமாரனைக் கூப்பிட்டு பின்வருமாறு கேட்டாள்.

"நாராயணா! நீ வேதம் வாசிக்கும்பொழுதெல்லாம் "மாத்ரு தேவோபவ" என்று சொல்லுகிறாயே அப்பதத்தின் தாத்பர்யம என்ன? அதை நீ எனக்குச் சொல்லுவாயாக" என்றாள், நாராயணன் "நான் எப்படி ஓர் சுவாமியை மனோவாக்குக் காயத்தால் சேவிப்பேனோ அம்மாதிரியே எனது தாயை ப்ரத்யக்ஷத்தில் காணும் ஓர் தெய்வமென்றெண்ணி வழிபடவேண்டும். மேலும், நான் என் தாய்க்கு ஓர்விதமான சஞ்சலத்திற்கும், அருவைக்கும் இடங்கொடாமல் எப்பொழுதும் அவளுக்குச் சந்தோஷத்தையும் மனத்திருப்தியையும் உண்டாக்குவதையே ஓர் விரதமாகக்கொண்டு ஒழுகவேண்டுமென்பதுதான். ஆனால் ஓர் உத்தமபுருஷன் தன் தாயையும் தன் தாய்நாட்டையும் சமமாகப்பாவிக்கவேண்டுமென்று பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஒருவன் தாய்க்கு மாத்திரம் ஊழியஞ்செய்து தாய்நாட்டிற்குச் செய்யாவிடில் ஓர் உத்தம புருஷனாகான். ஆகவே, ஓர்விதமான ப்ரதிப்ரயோஜனத்தையும் நாடாமல் நிரந்தரமாயுழைத்துப் பலகஷ்டங்கள் நேரிடினும் வெகு சாந்தத்துடன் பொறுத்துத் தன் தாய்க்கும் தாய்நாட்டிற்கும் சேவை செய்யவேண்டும். இதைத்தான் எல்லாச்சாஸ்திரங்களும் வேதங்களும் முறையிடுகின்றன." என்று பதிலுரைத்தான்.

ரீணுபாய்.—"நாராயணா! இப்பொழுது நீ உன்னுடைய வாயினாலேயே நான் ஒரு கடவுளுக்குச் சமானம் என்று சொன்னாயல்லவா? எனக்குச் சந்தோஷத்தையும் திருப்தியையும் உண்டாக்குவது உனது கடமையென்றாயே. அவ்வனமாயின் நீ என் இஷ்டப்படி நடந்து என் மனக்குறைகளைத் தீர்க்கவேண்டும்" என்றதும் நாராயணன் "நான் தங்களிஷ்டப்படி நடக்கச் சித்தனாயிருக்கிறேன் தமதெண்ணத்தைத்தெரிவிப்பீரேல், அதைக்குறைவற நிறைவேற்றி விடுகிறேன்." என்று பதிலளித்தான்.

14. புதல்வன் தனதாக்ஞைக்கிணங்கி நடக்க வாக்களித்ததைக்கண்டு மனக்களிப்புடன் தன் புதல்வனைக் கலியாணம் செய்துகொள்ளும்படி வேண்டினாள். நாராயணன் தன் பேச்சின

லேயே சிக்கிக்கொண்ட பேதமையை நொந்துகொண்டான். தனது தாய்நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமையோ மிகவும் அத்யாவசியமாயிருந்தது. தனது தாயின் இஷ்டத்தை நிறைவேற்றுவதும் முக்யமாயிருந்தது. ஆகவே, இதுசெய்வது இது தவிர்வது என்றறியாது அவர் மனம் தாமரையிலை நீரெனத்ததளித்தது. இச்சமயத்தில் ராணுபாயும் ஓர் பெண்ணைத்தேடிக்கலியாணம் நிச்சயம் செய்துவிட்டார். அக்கலியாண நாளுக்கு முன்னதாகவே இஷ்ட மித்ர பந்து ஜனங்களும் இம்மங்கள காரியத்தைக்கண்டு கண்களிக்கவும் நிறைவேற்றவும் வந்திருந்தனர். கலியாண தினத்தன்று மணக்கோலத்துடன் நாராயணன் தன் பாரியையோடு மிகவும்சாந்தமாயுட்கார்ந்துகொண்டு இவ்வலையினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ள எல்லாம் வல்ல இறைவனின் உதவியை எதிர் பார்த்தவனாகவிருந்தான்.

15. கலியாணச்சடங்குகள் ஆரம்பிப்பதற்குமுன் புரோகிதர் ஜபித்த ஜலத்தில் கொஞ்சம் எடுத்து நாராயணனுக்குக் கொடுக்கையில் "சாவதானம், சாவதானம்" என்று சொல்லி நாராயணன் கலியாண மண்டபத்தினின்றும் திடீரென வெளிக்கிளம்பித்தன்னைப் பின்பற்றி வந்தவர்கள்கைக்கு மெட்டாதபடி வெகுவிரைவாயோடித் தன்னூரெல்லையையும், கோதாவரி நதியையும்கடந்து வட இந்தியா முழுதும் சஞ்சரித்து வந்தார். தனது வாழ்நாளைத் தேச சேவையில் செலவுசெய்து மொகலாயர் கொடுங்கோலாட்சியால் பிரஜைகள் அனுபவித்துவந்த கஷ்டங்களை அறவே ஒழிக்க எண்ணங்கொண்டார். தன் எண்ணங்களை நிறைவேற்றுவதின் பொருட்டு இவ்வுலகத்தில் யாதொரு பற்றுமில்லாமல் எவ்விதமான கஷ்ட துக்கங்களையும் அநுபவிக்கச்சித்தராயினர்

16. இவ்வனம் வெளிப்போந்தவர் நாசிக்பட்டினத்திற்கும் வட இந்தியாவில் விசேஷ க்ஷேத்திரங்களுக்கும் ராமதாஸ் எனும் வேறுபெயர் புனைந்து அவ்வவ்விடங்களில் பண்டிதர்களோடு பழகியும் வாதாடியும் ஹிந்துமதத்தின் சாராம்சத்தை நன்கறிந்தார். அக்காலத்தின் தேச ஸ்திதியைப் பிறர் சொல்லிக்கேட்க இஷ்டமில்

லாமல் தானாகவே நேரில் கண்டறியவும் ஜனங்களோடு பழகி அவர்களின் கஷ்டநஷ்டங்களை அறியவும், அவர் பல்லக்கின்றி எங்கும் சஞ்சாரம் செய்து வந்தார். மேலும், கிராமங்களிலும் பட்டினங்களிலும் நடக்கும் அநாசாரங்களை நேரில் பார்க்கவும் வட இந்தியாவி லுள்ள திவ்ய ஸ்தலங்களிலும் ஒப்புயர்வற்ற இறைவனைக் காட்சிகொண்டு மனமகிழவும் என்றும் குன்றாத அறிவு எனும் சுனையின் நீரைப் பருகுவதற்காகவும் இவ்வாழ்வின் இம்மை மறுமைப்பயன்களை அறிந்து அதன்படி ஒழுகவும் இவர் வட இந்தியா முழுதும் சஞ்சரித்துவந்தார்.

17. இப்படித் தேச சஞ்சாரம் செய்து வரும்பொழுதே ஒவ்வொரு கிராமத்திலும் தங்கித் தான்கற்ற சில உண்மைகளை ஜனங்களுக்குப் போதித்தும் அவ்வுண்மைகளைத்தழுவி நடக்கவேண்டுமென்று வற்புறுத்தியும் வந்தார். சிற்சிலவிடங்களில் ஜனங்களோடு சம்பாஷித்தும் அவர்களுக்கு உபதேசித்தும் மற்றும் சில காலங்களில் வசனநூல் மூலமாகவும் காவிய ரூபமாகவும் ஜனங்களுக்கு மேன்மையான புத்திமதிகளையும் அரிய உண்மைகளையும் போதித்துவந்தார். ஜனங்களுக்குக் கடவுள் வழிபடுதல் பெரியோரையும் விருந்தாளிகளையும் மரியாதை செய்தல் தன் மதாசாரத்தை அனுஷ்டித்தல் தன் தாய் நாட்டிற்குத் தொண்டு செய்தல் தான் எடுத்த காரியத்தை ஊக்கத்துடன் செய்தல் என்ற விஷயங்களைத்தான் ராமதாஸ் தான் சென்ற விடமெல்லாம் போதித்து வந்தார். இவரது சாந்த குணத்தையும் பெருந்தன்மையையும் வல்லமையையும் தேசாபிமானத்தையும் அறிந்த எல்லோரும் அவரது புத்திமதிகளைக் கடைப்பிடித்தொழுகிவந்தனர். மெய்ஞ்ஞானியின் தூய்மையான வாழ்வைக்கண்டு ஜனங்களும் அவ்விதமே நடப்பாராயினர். இவர் புகழ் மகாராஷ்டிரம் முழுதும் பரவி மிக்க கீர்த்தியை உண்டாக்கின. இவர் திருவாய் மலர்ந்தருளிய திவ்ய வாக்கை ஜனங்கள் வேதவாக்காக மேற்கொண்டு அதன்படியே நடந்து வந்தார்கள்.

(தொடரும்)

S. R. வெங்கட்ராமன்.

ஸ்ரீ

சுதேசி.

மகாத்மா காந்தியின் உபந்யாச மொழிபெயர்ப்பு.

உங்களுக்கு முன் பலத்த யோசனையின் பேரிலேயே பேசத் துணிந்தேன். இவ்விஷயத்தைப் பேசக்கேட்டு என்னைச் சோதனைக் குள்ளாக்கிவிட்டீர்கள். இவ்விஷயமோ மிகவும் அந்தரங்கமாயும் நுண்ணியதாயும், கடினமாயுமுள்ளது. ஒருவிதமான கருத்தை இதற்கு நான் கொள்ளுவதால் மிகவும் அந்தரங்கமாயும் நுண்ணிய தாயுமிருக்கிறதென்கிறேன். என் கருத்துக்களை நுங்களுக்கு விளக் கிக்காட்டி நீங்கள் குதூகலிக்கும்படி செய்ய எனக்குப் போதிய இலக்கியவிலக்கணப்பயிற்சியும் நாவன்மையும் பெறவில்லை. ஆதலால், கடினமென்கிறேன். இவ்வியாசத்தில் அநேகம் குறைகள் உங்களுக் குத் தென்படும். எனினும், அவற்றை நீங்கள் க்ஷமித்துவிடுவீர்க ளென நான் அறிவேன். அங்ஙனம் எண்ணுவதற்கு இன்னொரு காரணம் உண்டு. அதாவது இன்று நான் என்னசொல்லப்போகி றேனோ அவற்றை அனுஷ்டித்துக் கொண்டிருப்பேன், அல்லது எனக்குச் சக்தியுள்ளமட்டும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயற்சித்து வருகிறேன். சென்ற மாதம் ஒரு வியாசத்திற்குப்பதி லாக ஒரு வாரம் [illegible] தியானத்திலேயே செலவிட்டீர்களென அறிய எனக்கு அதிக தைரியம் உண்டாகிறது. நான் சொல்லவிருப் பது வெற்றியடையவேண்டுமென என் முழுமனதுடன் கடவுளைப் பிரார்த்தித்தேன். அங்ஙனமே நீங்களும் பிரார்த்தித்து என்னை ஆசிர்வதிப்பீர்களென எனக்குத் தெரியும்.

நீண்டகாலம் யோசித்துவந்ததன் பயனாக சுதேசி என்பதற்கு எனது பொருள் என்னவென்று விசேஷமாக விளக்கக்கூடிய ஓர் இலட்சியத்திற்கு வந்துளேன். சுதேசி என்பது நம்மையடுத்துச் சுற்றிலும் இட்டுவனவற்றையே உபயோகித்து இவற்றைவிட அதிக தூரத்திலுள்ளவற்றை உபயோகிக்காமல் தடுக்கும் ஓர் உணர்ச்சியே

யாகும். இது இவ்வாறாக மற்றவைகளை எடுத்துக்கொண்டு மேலே சொல்லிய இலக்கணப்படி பார்த்தால் எனது பூர்வீகர்களுடைய மதத்தையே நான் கைப்பற்றவேண்டும். அதுதான் எனக்கடுத்துள்ள சமயச்சுற்றமாகும். அதில் குறைகளிருப்பதாக எனக்குத் தென்பட்டால் அக்குறைகளை நீக்கி விடுதலே என் மதத்திற்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்தவனாகிறேன். இராஜதந்திரத்துக்குவா எனது நாட்டில் தொன்றுதொட்டு வந்த ஸ்தாபனங்களையே அங்கீகரித்து அவற்றில் எதேது குற்றங்களென நிரூபிக்கப்பட்டனவோ அவற்றைக் களைந்து என் கடமையை நிறைவேற்றிக்கொள்வேன். இதுபோன்று பொருள்நிலைக்கு அண்டை வீட்டுக்காரர் தயாரிப்பனவற்றையே ஆளவேண்டும். அவற்றுள் ஏதாவது நேர்த்தியாகவும் உறுதியாகவும் செய்யப்படவில்லை என்றால் அவற்றை சரிவரச் செய்யுமாறு செய்யவேண்டும். இத்தொழில்களில் எங்கெங்கு குறைகளிருக்கின்றனவோ அவற்றையெல்லாம் நிரப்பவேண்டுவது எனது கடனாகும். இத்தகைய சுதேசியத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்துவிட்டால், ஸத்ய யுகம் பிறந்து விடுமென சிலர் சொல்லுகிறார்கள். நம் வாணாட்களுக்குள்ளே எல்லீரும் சோறும் நன்றுள்வந்துவிடாதெனினும் அதைநாடி உழைப்பதைத் தவிர்த்து விட்டோமா? அது போலவே அனேக ஜன்மாந்தரங்களுக்கப்பால் தான் கைகூடப்போவதெனினும் அதற்காக நாமுழைப்பதைத் தவிர்த்துவிடோம்.

மேலேகாட்டிய சுதேசியத்தின் மூன்று பகுதிகளையும் தனித்தனியாய்ச் சுருக்கமாக ஆராய்வோம். ஹிந்து மதம் புராதன சம்பிரதாயங்களைத் தழுவியே நிற்கின்றது. ஆகவே சுதேசியத்தைப் பரப்புவதற்குப் பெரிய சக்தியாய் நிற்கும். அதுவே இப்புவனத்திலுள்ள எல்லா மதங்களைக்காட்டிலும் மிக்க ஸமரசம் பொருந்தியதாகும். ஏனென்றால், அது பிறமதங்களைத் தன்னுளிழுத்துக்கொள்ளத்தேடாதது. முந்திய நாட்கள் போலவே இன்றைக்கும் அது அளவற்று விரியும் ஆற்றலைப்பெற்றிருக்கிறது. புத்தமதத்தைத் தனக்குள் ஐக்கியப்படுத்திக்கொண்டு வெற்றிமாலை சூடி நிற்கின்றது. இதையே, புத்தமதத்தை வெருட்டிவிட்டது என்று சிலர் தப்பித

மாகக்கொள்கின்றனரென எனக்குத்தோன்றுகின்றது. சுதேசிய ஊக்கத்தின் காரணத்தினால் ஒரு ஹிந்து தனது மதத்தைப்பற்றிக் கொள்ளமறுப்பான். அதுதான் உத்தமம் என்று எண்ணிக்கொண்டல்ல. ஆனால் அதில் குறைகள் இருப்பின் அவற்றை நிரப்பிவிடலாமென்றதைரியத்துடனே தழுவுமின். ஹிந்துமதத்தைப்பற்றிச்சொல்லியது உலகத்திலுள்ள மற்ற மதங்களுக்கும் உண்மையெனவே நம்புகிறேன். ஆனால் இந்த ஹிந்து மதத்திற்கே விசேஷமாகப் பொருந்துமெனக்கொள்ளுகிறேன். இதைச்சொல்லவேண்டுமென்று நான் இதுகாறும் பிரயாசைப்பட்டுக்கொண்டிருந்தேன். எள்ளளவாவது என் வார்த்தையை மதிக்க நீங்கள் உடன்படுவீரேல் உங்களை நான் வேண்டிக்கொள்வது இதுவே. இதுவரை கிறிஸ்தவ பாதிரிச்சபைகள் எண்ணிறந்த நன்மைகளை இந்நாட்டில் செய்துவந்திருக்கின்றன. இனிமேலும் இவ்வாறு பொதுஜனங்களுக்குப் பயன்படக்கூடிய எல்லாக் காரியங்களையும் செய்யவிருக்கின்றன. ஆனால், உங்கள் மதத்திற்கு எல்லோரையும் இழுத்துக்கொள்ளவேண்டுமென்ற நினைப்பைமட்டும் தவிர்த்துவிட்டு விடும்படி பிரார்த்திக்கிறேன். இதை குறும்புத்தனத்தால் சொன்னது என்று கொள்ளமாட்டீர்களென்றே நம்புகிறேன். திரிகரணசுத்தியோடும் மிகத் தாழ்மையோடும் இந்த யோசனையைத் தெரிவிக்கிறேன். மேலும். செவிசாய்க்கவேண்டுமென்று உங்களைக்கேட்க எனக்கொரு பாக்யமுண்டு. விவிலியவேதத்தை ஆராய பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

எனது இதயத்தில் எந்த ஏற்றமான தானத்தைப்பகவத்கீதைக்குக்கொடுத்திருக்கிறேனோ, கிட்டத்தட்ட அதே இடத்திற்கு மலைமுறையில் செய்த உபந்நியாசமும் சமமாகப் போட்டிபோடுகின்றது, "வழிகாட்டுக" "அன்பொளியே" என்று ஆரம்பிக்கும் தோத்திரப்பாடலையும் இன்னும் இதுபோன்று உண்மை பாவேசத்தோடு எழுதிய பாடல்களையும் பக்தியில் கரைந்த மனதுடன் பாடுவதில் எந்த கிறிஸ்தவனும் என்னை மிஞ்சிவிடமுடியாதென்பது இன்னும் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த பாதிரிகளின் ஸகவாஸத்தில் நான்

பழகியுள்ளேன். அவர்களில் சிலரோடு அநேகமாகிய பெறற்கரிய பாக்கியத்தைப்பெற்றிருக்கிறேன். ஆகவே, "ஹிந்துவாயிருக்கிறேன்" என்ற மனப்பான்மையோடு பேசாமல் உலகத்திலுள்ள எல்லாப் பெரிய மதங்களை நிகில்லைமைப்படுத்தி அதிலும் கிறிஸ்தவ மதத்தில் மிகவும் பக்தியுடையவனுமிருக்கிறேன் என்ற தைரியத்துடனேயே மேற்சொன்ன யோசனையைச் சொல்லத்துணிந்தேன் என்று நீங்கள் சம்மதிப்பீர்களென நான் நம்புகிறேன். 'உலகத்தில் எங்கும் செல்லுங்கள்' 'Go ye unto all the worlds' என்ற உபதேசத்திற்குக் குறுகிய நோக்கத்தோடு பொருள் கொண்டு அதன் கருத்தை மாறுபடுத்திவிட்டார்களென்று ஒருவேளை இருக்கலாமல்லவா? தம் மதத்தை விட்டு உங்கள் மதத்திற்கு வந்தவரிற் பெரும்பாலார் பொருளுக்கு மட்டுமே தழுவியவராவாரென்று என்னுடைய பிரத்யட்சானுபவத்தைக்கொண்டு சொல்லுவது மறுக்கப்படமாட்டாது. சிலவிடங்களில் நீங்கள் கேட்டுக்கொண்டது இயைந்துகெட்டாது. வழிந்துக்கேட்டது. ஒவ்வொரு தருணத்திலும் உங்கள் மதத்தைப்புதிதாகத் தழுவுவார்கள். தாக்குப்பின்னுல் ஒரு நீங்காத புண்ணை வைத்துவிட்டே வந்திருக்கிறார்கள். இதைத்தவிர்த்துவிடலாமென்றே நான் எண்ணத்துணிகிறேன். கவலைமம் இதயத்தின் மாற்றம் உலகத்திலுள்ள ஒவ்வொரு பெரிய மதத்திலும் பூரண ஸாத்தியமென்றே எனது அனுபவத்திலே கண்டுள்ளேன். வழக்கான பணிக்கட்டியின்பேரில் நடக்கிறேன் என்று நான் அறிகிறேன். (தலைவருக்கும் அயருக்கும் இடக்தரும்விஷயத்தைப்பேசுகிறேன். எனது விஷயத்தின் இப்பகுதியைப் பின்வரும் வார்த்தைகளோடு முடிப்பதற்கு உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளப்போவதில்லை. நம் கண்முன்பாக இன்று ஐரோப்பாவில் நடைபெறும் பயங்கரமான கோரங்கள் எதைக்காட்டுகின்றன? சாந்தியின்புத்திரன் எனக்கொண்டாடப்பட்ட நஸரேத் இயேசுவின் உபதேசத்தை உண்மையறிந்த ஒருவனேனும் ஐரோப்பாவில் இருக்கிறுனென நீங்கள் மறுப்பீர்களா? இதினின்றும் அவ்வுபதேசவொளியை விளக்கிறைக்கு கீழ்ப்பிராந்தியங்களிலிருந்தே ஐரோப்பாவிற்குச் செல்லவேண்டியிருக்கிறது என்று ஏற்படவில்லையா?

சமய விஷயங்களில் உங்களுடைய உதவியை நாடினேன். அதைக்கொடுக்க நீங்களே விசேஷ பாத்தியப்பட்டவர்கள். ஆனால், இராஜீய விஷயங்களிலும் உங்கள் உதவியை நாடவேணத்துணிகின்றேன். சமயத்துக்கும் இராஜ தந்திரத்திற்கும் சம்பந்தமில்லையென்று சொல்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. இந்தியதினின்றும் சமயத்தைப் பிரித்துவிட்டால் புதைப்பதற்கு அநுகூலமான ஒரு பிரேதம்போல் ஆகிவிடுகின்றது. உண்மையாக நீங்கள் வாய்பேசாமலேயே இராஜீயத்தைப் பெரும்பாலும் உங்கள் செல்வாக்கிற்கு இணங்கச்செய்துகொண்டு வந்திருக்கின்றீர்கள். இப்பொழுது செய்யப்பட்டு வருவது போலவே முந்தியும் இராஜீயத்தை சமயத்தினின்றும் வேறுபடுத்தாமலிருந்தால், நாமெல்லாரும் அடிக்கடி காண்கிறபடி இராஜீயம் இத்தனை தாழ்நிலையடைந்திருக்காது. இத்தேசத்தில் இராஜீய வாழ்க்கை மிகவும் சந்தோஷகரமான நிலைமையில் இருக்கிறதென்று எவனும் கருதவே மாட்டான். சுதேசியுணர்ச்சியைப் பின்பற்றி என்நாட்டிற்கும் சொந்தமான ஸ்தாபனங்களையும் கிராமப் பஞ்சாயத்துகளையுமே நான் தழுவி நிற்கின்றேன். இந்தியா உண்மையில் குடியரசு நாடேயாகும். அது அங்ஙனம் இருப்பதாலேயே அதைக் கவிழ்த்துவிட இந்த ஒவ்வொரு திரையையும் தாண்டி, இதுவரை நிலையாக நின்றுகொண்டிருக்கிறது. மன்னர்களும், பாளையக்காரர்களும் இந்தியாவிலே பிறந்தவராயினும் அன்றி வேறு நாட்டினராயினும் வரி வசூலிப்பதைத் தவிர வேறு எவ்விதத்திலும் பொது ஜனங்களைத் தொடவேயில்லை. அவர்களும் தம்பக்கத்தில் ஸீஸருடையதை ஸீஸருக்கே செலுத்திவிட்டு ஏனைய விஷயங்களில் தம்மிஷ்டப்படி அநேக காரியங்களை நடத்திவந்திருக்கின்றனர். வருணாச்சிரமமென்ற விசாலமான கட்டுப்பாட்டால் தம்மதத்திற்கு வேண்டுவனமட்டும் செய்து கொள்ளவில்லை. தங்களுடைய இராஜீயவாழ்க்கைக்கு வேண்டுவனவற்றையும் பூர்த்தியாய்ச்செய்துகொண்டு வந்தனர். இந்தச் சாதிக்கட்டுகளினால் ஜனங்கள் தமக்குள்ளே நேரிடும் விடயங்களைக் கவனித்து வந்ததுமன்றி, ஆளுவோர்களால் கெடுதி ஏதாவது ஏற்பட்டால் அவற்றையும் எதிர்த்து வந்தார்கள். வருணாச்சிரம தருமத்தை நிலைக்கச்செய்யும் ஆற்றலு

ள்ள ஒரு ஜாதியினருக்குக் கட்டுப்பாடுகளை அமைத்துக்கொள்ளும் சக்தி கண்டோர் அதிசயிக்குமாறு உண்டு என்று நான் சொல்வேனுமில் அதையொருவரும் நீதியோடு மறுக்கமுடியாது. இக்கட்டுப்பாடுகள் எவ்வளவு சாமர்த்தியமாய் அமைக்கப்பட்டுளவென்பதை ஒருவன் அறியவேண்டுமானால் கும்பமேளாவைப் பார்வையிட்டால் போதும். அங்கு கூடும் லட்சக்கணக்கான ஜனங்களுக்கு எவ்வித முயற்சிகளும் தென்படாமலேயே வேண்டிய சௌகரியங்களைத் தையும் குறைவின்றிச்செய்து கொடுக்க வல்லது எனின், இக்கட்டுப்பாடுகள் எவ்வளவு சாமர்த்தியமாக அமைக்கப்பட்டுளவென்பதற்கு வேறு அத்தாக்ஷியும் வேண்டுமோ? இருப்பினும் கட்டுகளேற்படுத்திக்கொள்ளும் சக்தி எங்களுக்கு மிகக் குறைவென்று சொல்லுவதே வழக்கமாகவிருக்கிறது. அங்ஙனம் சொல்லுவதையே நாகரீகமெனக் கொண்டுவிட்டனர். இந்நாட்டில் புதிதாய் ஏற்படுத்தப்பட்டுவரும் நவீன சம்பிரதாயங்களில் பிறந்து வளர்ந்து வருபவர்களுக்குள் இல்லையென்று சொல்வது உண்மையாகவிருக்கலாமென்றே நான் அஞ்சுகின்றேன். அதிக பயங்கரமான ஆபத்துக்களுக்குட்பட்டு இதுகாறும் உழைத்து வந்திருக்கின்றோம். சுதேசி வழக்கத்தை நழுவவிட்டு நம்மதியையே நாடினவராகின்றோம். படித்த வகுப்பாராய நாம் அன்னியபாஷை மூலமாய் நமது கல்வியைப் பெற்றுவந்தோம். ஆகவே, பொது ஜனங்களோடு நாம் கலந்து உறவாடவில்லை. பொது ஜனங்களுக்குப் பிரதிநிதிகளாய் நிற்க விரும்புகின்றோம். ஆனால், தவறிவிடுகின்றோம். ஆகவே உத்யோகஸ்தர்கள் வேறு, நாம் வேறு என்று அவர்கள் எண்ணாமலில்லை. இவ்விருவகுப்பாரும் அவரவர் இதயங்களை அறியமாட்டாதவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் கொண்டுள்ள ஆசாபாசங்களை நாம் கொள்ளவில்லை. இதனாலேயே தொடர்ச்சி விட்டுப்போயிற்று. கட்டுப்பாடமைப்பதில் தவறிவிட்டதை நீங்கள் உண்மையில் பார்க்கவில்லை. ஆனால் பிரதிநிதிகளுக்கும், அவர்களுக்குப் பின்னிருக்கும் பொது ஜனங்களுக்கும் ஐக்கிய திருஷ்டி இல்லையென்றே காண்கிறார்கள். சென்ற ஐம்பதாண்டுகளாக நாம் தேச பாஷையிலேயே கல்வி கற்றுக்கொண்டு வந்திருப்போமாயின்; நம் வீட்டிலுள்ளபெரி

யோருக்கும் வேலைக்காரருக்கும் மற்றும் அக்கம்பக்கத்திலுள்ள வருக்கும் நம் அறிவு பரவியிருக்கும். போஸ், ரே ஆகிய மேதாவிகள் கண்டுள்ள அரும்பெரும் விஷயங்கள் இராமாயணம் பாரதம் போன்று வீடுக்குள் பேச்சாயிருந்திருக்கும். இப்பொழுதிருக்கிற படி பார்த்தால் பொது ஜனங்கள் சம்பந்தப்பட்டவரையில் இந்த உண்மைகள் அந்நிய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பின் எவ்வாறேற்றுக்கொள்வார்களோ? எவ்வாறு அன்புற்றிருக்கமாட்டார்களோ அதுபோலவே இந்நாட்டிலும் இப்பெரிய உண்மைகள் பிறந்திருக்கின்றன. சிறிதேனும் வேற்றுணர்ச்சி உண்டாகவில்லை. கல்வியின் எல்லா அம்சங்களும் தேசபாஷை மூலமாகப்போதிக்கப்பட்டு வந்திருப்பின் நாம் அதிசயிக்குமாறு அவைகள் மிகுந்த அழகும் செழிப்பும்பெற்று விளங்கியிருக்குமெனத் துணிந்து சொல்வேன். கிராம சுகாதாரம் போன்றுள்ள அநேக பிரச்னைகள் வெகு நாட்களுக்கு முந்தியே தீர்க்கப்பட்டுப்போயிருக்கும். இதுவரையிலும் நீடித்திருந்திருக்காது. கிராமப் பஞ்சாயத்துக்கள் ஒரு புதுவழியில் ஜீவசக்தியோடு விளங்கிக்கொண்டிருக்கும். இந்தியாவில் அதன் தேவைகளுக்குத் தகுந்த சுயராஜ்ஜியம் தழைத்தோங்கிக்கொண்டிருக்கும். இந்தப்புண்ணியபூமியில் கட்டுப்பாடான சதிக்கொலைகள் என்னும் இழிவான சம்பவங்களுக்கு இடமிருந்திருக்காது. சீர்திருத்திக்கொள்ளலாம். காலாதீதமாய் விடவில்லை. உங்களுக்கு மனமட்டுமிருந்தால், வேறு எந்தத்தனிமனிதனோ அல்லது அநேகர் சேர்ந்த சபைகளோ, செய்யவியலாதவாறு நீங்கள் உதவி புரியலாம்.

இப்பொழுது கடைசிப் பகுதியை எடுத்துக்கொள்வோம். பாமர ஜனங்களிடம் தரித்திரம் நிலைத்துப் போனதன் காரணம், பொருளாதாரத்தையும் தொழிலையும் சுதேசியத்தையும் விட்டு விலகியதேயாகும். இதுவே, இத்தேசத்தைப் பாழ்படுத்திவிட்டது. வர்த்தகப்பொருளாவது வெளியே யிருந்து இந்தியாவுக்குள்ளே கொண்டுவரா திருந்தால், இங்கு தேனும் பாலும் பொங்கித்ததும்பும் செழுமை நிலவும். இங்ஙனமிருக்கவேண்டுமென்பது கடவுளுக்குச் சம்மதமில்லைபோலும், நாம் பேராசைப்பட்டோம். அதுபோலவே

இங்கிலாந்தும் கொண்டது. இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமுள்ள சம்பந்தம் ஒரு பெரிய தப்பிதத்தையே ஆதாரமாகக்கொண்டு நிகழ்கின்றது என்பதற்குச் சந்தேகமேயில்லை. ஆனால், அவள் இந்தியாவில் இருப்பது தப்பிதத்தின் மேலல்ல. இங்குள்ள ஜனங்களுக்காகவே இந்தேசத்தை அவள் நம்பிக்கையாக வைத்துக் காப்பாற்றிக்கொடுக்கத் தான் இருப்பதாகப் பன்முறையும் அவள் உறுதிமொழி கொடுத்திருக்கிறாள். இது உண்மையேயெனின் லங்காஷைர் எட்டவே நிற்கவேண்டும். சுதேசிக்கொள்கை க்ஷேமத்தையே தரும். துபசத்தைவிளைக்குமெனில், லங்காஷைர் தான் வேறு மேலே விலகிநிற்கலாம். ஆனால் ஒருவேளை தற்சமயத்தில் அதற்கு ஒரு பெரிய நடுக்கம் உண்டாகலாம். பழிவாங்கும் உத்தேசத்துடன் கைக்கொள்ளப்படும் கருவியாய் பஹிஷ்கார இயக்கத்தையே சுதேசியென நான் கருதமாட்டேன். எல்லாரும் அனுஷ்டிக்க வேண்டிய ஒரு சமயக்கொள்கையென்றே அதைக் கொள்கிறேன். நான் அர்த்த சாஸ்திரத்திலே தேர்ச்சியடைந்தவனல்லன். எனினும் சில நூல்களைப்படித்திருக்கிறேன். அவைகளில் இங்கிலாந்து தனக்கவசியமானவற்றிற்குப் பிறநாட்டைச்சாராமல் தன்னிடத்தேயே எல்லாவற்றையும் உண்டாக்கிக்கொள்ளக்கூடிய நாடுதானெனக்கண்டேன். இக்கொள்கை முற்றிலும் பரிகசிக்கத்தக்கதாயிருக்கலாம். இதற்கு ஒரு சரியான மூகாந்திரமுமுண்டு. அதாவது உலகத்திலுள்ள எல்லாத்தேயங்களையும்விட இங்கிலாந்தே அதிகமாக இறக்குமதிசெய்யும் நாடாய் இருக்கின்றது என்பதேயாம். தனக்காகவே தான் வாழ்வதற்குமுன் இந்தியா லங்காஷைருக்காகவாவது வேறெந்தேயத்தை யுத்தேசித்தாவது வாழ்தல் முடியாது. தான்வேண்டுவனவெல்லாம் தன் னெல்லைக்குள்ளடங்கிய பிரதேசங்களிலேயே விளைவித்துக்கொள்ளவாவது அல்லது அங்ஙனம் செய்துகொள்ள உதவவாவது செய்தாலன்றி இந்தியா தனக்காக வாழ்தல் இயலாது. சகோதரஹத்தி அருமை முதலிய இன்னும் அநேக தீயபயன்களை விளைவித்தும் உன்மத்தத்துடன் நாசகாரியமுள்ள போட்டியெனும் பெரிய சுழற்காற்றுக்குள் இதை இழுத்துவிடக்கேட்கவில்லை. அங்ஙனம் செய்யவும் கூடாது. அதற்குத் தேவையும்

இல்லை. ஆனால் அவர்களுடைய தனவந்தர்களை உலகம் போட்டியில் பிரவேசிக்கக்கூடாதென்று யாரே தடுக்கவல்லார்? உண்மையில் சட்டத்தால் முடியவேமுடியாது. பொதுஜன அபிப்பிராயம், சரியான கல்வி ஆகிய இவைகள் அநேகமாய் நாம் கோருவதைச்செய்யலாம். கைத்தறித்தொழில் அழியும் தருவாயிலிருக்கிறது. கடந்த வருஷம் யான் யாத்திரைசெய்து, எத்தனை நெசவுத் தொழிற்காரரைப்பார்க்கமுடியுமோ; அத்தனை பெயரையுங்கண்டு பேசமிருந்த சிரத்தை யெடுத்துக்கொண்டேன். கௌரவமாய் ஒரு செழித்தோங்கிவந்த ஒரு தொழிலிலிருந்து எத்தனை பேர்கள் எத்தனை குடும்பங்கள் இப்பொழுது அகன்றுபோய்விட்டன வென்பதைக்காண என் மனம் பதைபதைக்கின்றது. சுதேசி விரதத்தை நாம் கைப்பற்றுவதென்றால், நீங்களும், நானும் செய்யவேண்டிய கடமையொன்றுண்டு. அதாவது நமது தேவைகளைத் தயாரித்துத்தரக்கூடியவர்களைக் கண்டுபிடித்து ஆதரிக்கவேண்டும். தயார் செய்யும் அறிவு அவர்களுக்கில்லாமலிருந்து, சாதாரணமான தொழில் வேண்டுமென்றால், அவைகளை எப்படி தயாரிப்பது என்று சொல்லிக்கொடுத்து; அதன் பின் தயாரித்துத் தரச்சொல்லவேண்டும். அப்பொழுது, இந்தியாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் சொந்த ஆதாரத்தின் பேரிலேயே நிற்பதாயும், வேண்டுவனவற்றையெல்லாம் தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டிருப்பதாயும் இருக்கும். ஏனைய கிராமங்களில் எவற்றை விளைவிக்க முடியவில்லையோ, அவற்றையுதவி பண்டமாற்றிக்கொள்ளும். இதெல்லாம் பெரும் பைத்தியமாய்த் தோன்றும். நல்லது. இந்தியா பைத்தியக்கார நாடேயாகும். பரிசுத்தமான ஜலத்தில் மிக அன்புடன் ஒரு மகம்மதியன் உதயமாயிருக்கும்பொழுது, நீர்வேட்கையால் தொண்டை உலர்ந்து போகும்படி விடுவது பைத்தியக்காரத்தனமல்லவா? இருப்பினும், ஆயிரக்கணக்கான ஹிந்துக்கள் தாகத்தால் மடிவார்களேயொழிய; ஒரு மகம்மதிய குடும்பத்திலின்று வாங்கிப்பருகார்கள். இந்தியாவிலே நெய்யப்பட்ட ஆடைகளைத் தான் கட்டவேண்டுமென்றும்; உங்களுடைய மதம் கேட்கிற

தென நிச்சந்தேகமாய்ப்படும்படி செய்துவிட்டால்; இதே பைத்தியக்கார மனிதர்கள் அந்நிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட உடையையும், விளைவிக்கப்பட்ட உணவையும் உபயோகிக்க மறுத்து விடுவார்கள். கர்ஸன் பிரபுவே தேயிலைப்பானத்தைத் துலக்கிவிட்டார். அந்நிய சரக்கு இன்று இத்தேயத்தை ஆழ்த்திவிடும்போலத் தோன்றுகிறது. லட்சோபலட்சம் ஆண் பெண்களின் ஜீர்ண கருவிகளின் காரியங்களை பலவீனப்படுத்திவிட்டது. அவர்கள் வற்றல் பைகளில் இதுவும் இன்னொரு தீர்வையாய் நிற்கின்றது. ஹார்டிஞ்சு பிரபு சுதேசியே நாகரீகமெனத் துவக்கிவிட்டு விடலாம். கிட்டத்தட்ட இந்தியா பூராவும் அந்நியநாட்டுச் சரக்குகளைத் தரிக்காது நின்றுவிடும். விரிவான பொருள் கொடுத்தால் உயர்தர வகுப்புகளையே பாமர ஜனங்கள் பின்பற்றுவார்கள் என்று பகவத்கீதையில் ஒரு சுலோகம் சொல்லுகின்றது. கொஞ்ச காலத்திற்கு அதிகமான அசௌகரியத்தைத் தருமென்றாலும்; சுதேசி விரதத்தைப் படித்த வகுப்பார் திடமாய்க் கைக்கொள்ளுவாரேனில்; நாட்டைச் சூழ்ந்திருக்கும் கெடுதலைத் தவிர்த்து விடலாம.— ————வாழ்க்கையின் எந்த அம்சத்திலும் சட்டத்தைப்புக விடுதலை யான் பெறுகின்றேன். மிஞ்சினால், அது மிதமான கெடுதலேயாகும். அந்நிய நாட்டுச்சரக்குகளின் பேரில் கண்டிப்பான காப்புத்தீர்வைகள் போடுவதை யான் சகிப்பேன். அவசியம் வேண்டுமென வாதாடவும் செய்வேன். ஒரு பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகிய நேடால், தனது சர்க்கரைத்தொழிலை; மற்றொரு பிரிட்டிஷ் குடியேற்றநாடாகிய மாரிஷஸ்ஸினின்றும் இறக்குமதியாகும் சர்க்கரைக்கு வரிவிதித்துக் காப்பாற்றிக்கொண்டது. கட்டற்ற வியாபாரத்தை இந்தியாவின்மேல் சுமத்திப் பெரிய பாதகத்தை இங்கிலந்து செய்துவிட்டது. இந்த வியாபாரம் அதற்குச் சாதகமாயிருந்திருக்கலாம். ஆனால், இத்தேயத்திற்கோ அது விஷமாகப் பரவிவிட்டது.

எவ்விதத்திலேனும் இந்தியா பொருளாதாரத்தில் சுதேசியை அனுஷ்டிக்கமுடியாதென்று அடிக்கடி வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சேபணையை விடுப்போம். சுதேசி ஓர் வாழ்க்கை விதி

என்பதை யறியவில்லை. அவர்களுக்கு இது ஒரு தேசாபிமான
முயற்சிபோலும், இதில் ஏதாவது ஆத்மத்தியாகம் செய்யவேண்டி
வரின், கைவிட்டுவிடவேண்டிய முயற்சியேயாகும். இங்கே சுதே
சியத்தை மதாசாரமென்றே விவரித்திருக்கின்றோம். ஆகவே, மனி
தர்களுக்கு எத்தகைய சரீர துன்பங்கள் நேரிடினும் அவைகளனைத்
தையும் ஸகித்துக்கொள்ளவேண்டியதே. இந்த மந்திரத்தில் கட்
டுப்பட்டுநிற்கும்பொழுது, குண்டூசியோ, அல்லது ஊசியோ செய்
யப்படவில்லையென்ற காரணத்தால் இழக்கநேரிடினும், நாம் திகி
லடையவேண்டியதில்லை. இன்று அவசியமென நினைக்கும் ஆயிரம்
சாமான்களின்றியே, ஒரு சுதேசிய விமானி காலந்தள்ளுவான்.
தவிர, முடியாதென்று சொல்லி; சுதேசியத்தை தம்மனத்தினின்
றும் அகற்றிவிட்டார்கள். சுதேசி யென்பது விடாமுயற்சியாலேயே
அடையப்படுமென்பதை மறந்துவிடுகின்றனர். குறித்த சில சாமான்
களை எடுத்துக்கொண்டு அவைகளிலேனும் சுதேசி விரதத்தை
அனுஷ்டிப்பதென்றுவைத்துக்கொண்டாலும், நமது இலட்சியத்தை
நாடிச்சென்றவராகவே ஆவோம். இங்கு கிடைக்காத ஏனைய
சாமான்களைத் தற்கால வழக்கமாக அந்நிய நாடுகளிலிருந்து தரு
வித்து உபயோகித்துக்கொள்வதென்று வைத்துக்கொள்ளலாம்.

சுதேசிக்கு விரோதமாக விடுக்கப்பட்ட ஆட்சேபணைகளில்
ஒன்றுதான் நாம் ஆலோசிக்கவேண்டியிருக்கிறது. ஆட்சேபணை
செய்வோர்கள், இதைமுற்றிலும் சுயநலக்கொள்கையென்றும், தரும
சாஸ்திரத்திலிருந்து ஒரு சிறிதும் பிரமாணம் காட்டமுடியாதென்
றும் சொல்லுகின்றார்கள். சுதேசியத்தை அனுஷ்டிப்பதென்றால்,
அவர்களுக்கு நாகரீகத்தை விடுத்து அநாகரீகத்தைத் தழுவுவது
போன்றிருக்கிறது. இதைசவிஸ்தாரமாக நான் ஆலோசிக்கப்போவ
தில்லை. ஆனால், அடக்கம், அன்பு என்ற சட்டத்திற்கு ஒத்திருப்
பது சுதேசி யொன்றுதான் என்பதை நான் வற்புறுத்துவேன்.
நான் என்னுடைய சொந்தக்குடும்பத்துக்கே உழைக்கமுடியாம
லிருந்து இந்தியா முழுமைக்கும் உழைக்கப்புகுவது எத்துணை
அயோக்கியத்தனமெனப்பாருங்கள். அதைவிட குடும்பமட்டில்

முழுமனதையுஞ்செலுத்தி உழைப்பதே சிரேஷ்டமாகும். அதன் மூலமாகத் தேயத்தாருக்கோ மானிட ஜாதி பூராவுக்கோ உழைத்து விட்டதாக எண்ணிக்கொள்ளலாம். இதுவே அடக்கம். இதுவே அன்பு.

இலட்சியம் அல்லது கொடைக்குறியே செய்யப்பட்ட காரியத்தின் நன்மையை நிர்ணயிக்கும் அந்நியர்களுக்கு எத்துன்பத்தை விளைவிக்கிறேன் என்பதை இலட்சியம் செய்யாமலே குடும்பத்துக் காகப்பாடுபடலாம். உதாரணமாக, பொது ஜனங்களிடமிருந்துப் பணத்தைப்பறிக்கும் ஒரு வேலையிலமர்ந்து என்னைச் செல்வவந்தனாக்கிக்கொள்ளுவேன். இவ்வாறு எனது குடும்பத்திற்கு வேண்டியதை அநேகமார்க்கங்களில் உழைத்துத் தரலாம். இங்கே எனது குடும்பத்துக்காவது, நாட்டுக்காவது தொண்டுசெய்துவிட்டதாகக் கொள்ளப்படாது. என்னுடைய ஜீவனத்திற்கும் உழைப்பதற்காகவே கை கால்களைக் கடவுள் அளித்திருக்கிறார் என்று உணரலாம். அப்பொழுது என்னுடைய வாழ்வையும், என்னைச் சார்ந்தோரின் வாழ்வையும் விசேஷ ஆடம்பரங்களொன்றுமின்றி மிகச் சாமான்யமாகச் செய்துகொள்ளுவேன். இவ்விடத்தில் வேறெவனுக்கும், எத்தீங்கும் செய்யாமலே எனது குடும்பத்திற்குப் பாடுபட்டவனாவேன். இம்மாதிரியே ஒவ்வொருவரும் தனது வாழ்க்கையை நடத்த முன் வருவார்களானால், அப்பொழுது அதுவே ஒரு ஆதர்ச நாடாகும். ஒரே காலத்தில் எல்லோரும் இந்த உயர்ந்த நிலைமைக்கு வாராமலிருக்கலாம். ஆனால், அதன் உண்மையையறிந்து நாமே அவ்வாறு காரியாம்சத்தில் நடத்தினோமானால், அந்நன்னாள் வருகையை இன்னும் சீக்கிரமாகச் செய்தவராவோம். வாழ்க்கையை இவ்வாறு நடத்திக்கொண்டு வேறெந்த நாட்டையும் கவனிக்காமல் தாய்நாடாகிய இவ்விந்திய நாடு ஒன்றுக்கே உழைத்து வந்தால், வேறெந்தத் தேயத்திற்கும் இதனால் ஒரு தீங்கும் விளையாது. அன்னாருடைய தேசாபிமானம் ஒரே காலத்தில் அணைப்பதாயும், புறக்கணிப்பதாயுமிருக்கும். தாய் நாட்டிற்கு உழைப்பதி

லேயே என்று அக்கரை முழுவதையும் எவ்வித செருக்குமின்றிச் செலுத்தியாற்றலால் புறக்கணிப்பிக்கின்றேன். ஆனால், நம்முடைய தொண்டுபோட்டி, விரோதம் என்ற தன்மையைப்படையத் தயாரா யிராததால் அமைப்பதாயிருக்குமென்கிறேன். தேசாபிமானம் பொறுப்பை ஆதாரமாகக்கொண்டால் வளைக்குமென்றும், அங்ஙன மின்றி அன்பை ஆதாரமாகக்கொண்ட தேசபக்தி உயிரை அளிக் கும் என்று போதிப்பது ஒருபெரிய மதத்திற்கு ஆசார்யர்களா யுள்ள உங்களுடைய கடமையேயாகும். போதிப்பதுமட்டுமல்லா மல், உங்களனுட்டானத்திலும் கொண்டுவரவேண்டும். தவிர நாக ரீகம் இதுவே யாகுமெனத் துவக்கியும் விடவேண்டும்.

ஓம் தத்ஸத்.

ஓம்:

ஜனசேவகன்.

ஜனசேவையென்றெழுதிய வியாசத்தில் பிரகிருதியில் அபேதம் என்ற தர்மம் உள்ளும், பேதம் என்ற தர்மம் புறமும் ஓடிக்கொண் டிருக்கின்றனவென்றும் இவற்றில் அபேதம் என்னும்தர்மம் உள்ளே தன்று நிலைக்காவிடில்லை என்றால் நமது வாழ்வே, பிரபஞ்சத்தின் நிலை யே ஸாத்தியமல்லவென்றும் பேதம் எனும் தர்மம் புறத்தே வைக் கப்படவில்லையெனின் அழகும் சிம்மையும் பயனும் இவ்வியற்கையின் கண்ணே இல்லாதாகி குழப்பமும் விகாரமும் அநாகரீகமுமே இங்கு தலைதூக்கிக் கூத்தாடுமென்றும் இவ்விரு இயற்கைத் தருமத்தின் சேர்க்கையே சேவையென்றும் இது இப்பிரபஞ்சத்தில் ஒரு பர மாணுக்கூட விடாமல் எங்கும் எல்லாவற்றிலும் எல்லாக்காலங்களி லும் காணப்படுமென்றும் இந்தச்சேவை மனிதனைப்பற்றி நிற்கும் பொழுது ஜனசேவை எனப்படுமென்றும் ஆகவே இவ்வியற்கைத் தர்மமாகிய ஜனசேவை எல்லாரிடத்திலும் இருக்கவேண்டுமென்றும் இதுவன்றி மோட்சத்திற்கு எளிய சாதனம் வேறெதுவும் இல்லை யென்றும் பார்த்தோம். இங்கு எல்லாரிடத்திலும் ஜனசேவை

தோன்றவேண்டுமெனில் எங்ஙனம் ஸாத்தியமாகும்? ஏனென்றால், இப்பொழுது இல்லாதது இனி எங்ஙனம் தோன்றமுடியும்? கீதையில் "ஒன்று ஒரு காலத்தில் இல்லையென்று காணப்பட்டால் அது எக்காலத்திலும் இல்லாததாகவே காணப்பட்டால் அது எக்காலத்திலும் இல்லாததாகவே பாவிக்கப்படவேண்டும். பின்னையொரு காலத்தில் இருப்பதாக ருசுப்படுத்தமுடியாது" என்று சொல்லியுள்ளாரே ஆதலால், இப்பொழுதிருந்தாலல்லவா இனியும் தோன்றும். இப்பொழுதிருக்கிறதென்றால், அதைப்பற்றி இத்தனை வாதமேன்? பேச்சேன்? இன்றைக்கிருப்பது நாளையும் கட்டாயம் இருந்தே தீருமே? மேலும், ஜனசேவை இயற்கைத் தருமம் என்றீர்களே மனிதரும் இயற்கையின் விதிக்குட்பட்டு நிற்பவர்தாமே. ஆதலால், ஜனசேவையைப் பிறருக்கெடுத்துச்சொல்லுவதே அநாவசியமல்லவா? என்றிவ்வாறெல்லாம் கேட்கலாம். இவற்றிற்கெல்லாம் ஒரு சிறுவிடை இறுத்து மேற்சொல்வோம். அதாவது அய்யா நீங்கள் சொல்லியதெல்லாம் உண்மையே. ஜனசேவை நேற்றும் இருந்தது. நாளையும் இருக்கும். இன்றும் இருக்கிறது. வெள்ளையரிடத்திலும் இருக்கிறது. கருப்புநிறமுடையாரிடத்திலும் இன்னும் அதிகமாக இருக்கிறது. உங்களிடத்திலும் இருக்கிறது. என்னிடத்திலும் இருக்க வேண்டும். என்னிடமுள்ளது இவ்வழியாய் வெளிவருகின்றது. அதைத்தடுக்க அதிகாரம் உங்களுக்குண்டாமோ? நேற்றும் கடவுள் இருந்தார். நாளையும் இருப்பார். இன்றும் இருக்கிறார். அவரைப்பற்றிப்பேச்சேன். கோயில்களேன். வேதங்களேன். இவற்றை அநாவசியமெனக்கொள்ளாவிடில் நித்தியமான ஜனசேவையைப்பற்றிப் பேசுவதும் அநாவசியமாகாது. இன்னொன்று நித்தியமான ஜனசேவையைப்பற்றிப்பேசாமல் அழிந்துபோகுமவற்றையா பேசவேண்டுமென்பது உமது விருப்பம்?

ஜனசேவையைப்பற்றிப் பேசிவிட்டோம். ஜனசேவகரைப்பற்றிப்பேசுவோம்.

ஜனசேவை இயற்கையான விதியென்பது உண்மையேயானால், அதே இயற்கையின் விதிக்கு உள்ளடங்கியே எல்லாமனிதரும்

இருக்கிறார்களென்பதும் உண்மையே எனின், எல்லா மனிதரும் ஜனசேவகராகவே இருக்கவேண்டும் என்று ஏற்படும். அங்ஙனமே எல்லாரும் ஜனசேவகராகவே இருக்கின்றார்கள். சிறிதும் ஐயப்பட வேண்டாம். அங்ஙனமில்லையென்று எவரையாவது நாம் ரூபிக்க முடியுமென்றால் அவர் இச்சிருஷ்டியில் அடங்கியவரில்லையென்றே சொல்லிவிடுவேன். அங்ஙனம் ஒருவரையாவது காட்டும்படி எல்லோரையுமே கேட்கிறேன். ஆனால் ஒன்று கவனிக்கவேண்டும். தாம் ஜனசேவை செய்கிறோமென்று அறியாமல் கோடிக்கணக்கானவர்கள் இருக்கின்றார்கள். அவர்களை யான் சொல்லவரவில்லை, இவர்களும் நீங்கவே யான் கேட்கிறேன். உங்களால் காட்டமுடியாது. நிற்க.

உங்கள் கவனத்திற்கு இங்கு ஒன்று கொண்டுவரவேண்டியிருக்கிறது. அதாவது மனிதர் இயற்கையின் விதிகட்குக்கட்டுப்பட்டு நிற்கும் தன்மையைப்பற்றியதேயாகும். இவ்விஷயத்தில் எல்லாருமே பதிமூன்று பதினான்கு வயதுப்பையன்களை ஒத்திருக்கிறோம். இவ்வயதிலுள்ளவரை ஆண் பெண் என்ற இருபாலாருமே விரும்பார்கள். இவர்களால் துயரமுறுதார் எவருமே இல்லை. இரண்டு மூன்று வயது அதிகமாய்விட்டால் இவர்களுக்குத் தன்னையறிந்துகொள்ளும் சக்தி வந்துவிடும். அப்பொழுது பெற்றோர், உபாத்தியாயர், சிநேகர் முதலிய எல்லோரிடத்திலும் தக்கபடி தாமே நடந்துகொள்ளுவார். அல்லது இரண்டு மூன்று வயது கம்மியாயிருந்தால் இவர்களுக்கு சுதந்தரமில்லாமல் பெற்றோர், உபாத்தியாயர் முதலியவர் இவனைக் கண்டனைத்தண்டனைகளால் அடக்கியாண்டு தம்மனத்திற்கு உகந்தவாறு நடக்கும்படி பலவந்தத்தால் செய்துவிடுவார்கள். ஆனால் இப்பருவமோ குழந்தைகளைப்போல பலாத்காரத்திற்கும் கட்டுப்படாதது. சுயப்பிரஞ்ஞையுண்டாய் தானாகவே தக்கபடி நடக்கவும் செய்யாதது. அதாவது சொந்த புத்தியும் இல்லாது சொல்லிக்கொடுத்த புத்தியையும் நழுவவிட்டு சந்தியில் நிற்கும் காலம். இது போன்றே இயற்கையின் சுதியில் மானிடரிற் பெரும்பாலோரும் இருக்கின்றார்கள். விகாஸமுறையில்

இரண்டொருபடி கீழே நிற்பார்களாயின் விலங்குகளைப்போன்று பலாத்காரத்தால் இயற்கைவிதிகளையநுசரித்து சிறிதும் தவறாமல் நடப்பார்கள். இங்கு பலாத்காரம் என்பது பரிபூரண இன்னும் சில ஜீவச்செயல்கள். இரண்டு மூன்றுபடி மேலேறிவிட்டார்களானால் ஆத்மஞானம் பிறந்து தாமாகவே இயற்கையின் கதியைப்பூராவும் அறிந்து சிறிது மாறுபடாமல் ஒழுகுவார்கள். ஆனால் இடைநடுவேயுள்ள இந்நிலைமை யென்னென்பது. இது நம்மொவ்வொருவருக்கும் அநுபவ உண்மையாதலால் தத்தமக்குத் தோன்றிய பெயரை வைத்துக்கொள்ளுங்கள். விஷயத்தைமட்டும் நன்றாய் மனதிலிருத்திக் கொள்ளுங்கள். ஆகவே சுதந்திரமாக இயற்கையின் காரியங்களை செய்யவுமாட்டோம். விலங்குகளைப்போல நம் சுதந்திர முழுமையும் இழந்து நிற்கவும் சம்மதிக்கமாட்டோம். மேலே சொல்லிய பையன்களை வைத்துக்கொண்டு எப்படி பெற்றோரும், உபாத்தியாயரும் காரியங்களை நடத்தியும் நடத்தாமலும் இருக்கிறார்களோ அதுபோலவே இயற்கையும் கடவுளும் நம்மையும் வைத்துக்கொண்டு மனிதரின் இயற்கைத் தருமமாகிய ஜனசேவையை நடத்தியும் நடத்தாமலும் இருக்கின்றனர். பின்வருவதிலிருந்து நாமெல்லோரும் ஜனசேவகராயிருந்தும் ஜனசேவையின் உத்தம லட்சியமாகிய முக்தியல்லது விடுதலையையடையாமலிருக்கிறோம் என்று இனிது விளங்கும்.

நேயர்களே ஒரு வியாபாரியிடமோ, சேவகாரனிடமோ, யாசகனிடமோ ஒரு தோட்டியினிடமோ சென்று நீங்களேன் இவ்விதத் தொழில்களையெல்லாம் செய்கிறீர்கள். இவற்றில் பெருமையிருக்கின்றதா புகழிருக்கின்றதா? இதோ பாருங்கள் கிறிஸ்துநாதர் உலகத்துக்காக வாழ்ந்தார். தனக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லை. எல்லாவற்றையும் தியாகஞ்செய்தார். அவருடைய கோவில்களுக்குக் கணக்குண்டோ அவரை எத்தனை கோடானுகோடி ஜனங்கள் தொழுகின்றனர். அவர் மதத்தைத் தழுவிய வெள்ளையர் இன்று இவ்வுலகத்தில் எவ்வளவு தூரம் நாகரீகத்திலும் ஆதிக்கியத்திலும் மேலேறி நிற்கின்றனர். எவ்வளவு செழுமையுற்றிருக்கின்றனர்.

சுதந்தரதேவி அவர் நாட்டிலல்லவா ஆனந்தத்தாண்டவம் ஆடுகின்றாள். அவள் சமீபத்தில் தனது அம்சம் ஒன்றுகூடக் குறையக்கூடாதென்று எவ்வளவு ஆநந்தமாக நாலைந்து வருடங்களாக காளியம்சமாகவிருந்து நர்த்தனம் செய்தாள் அவர்களுடைய வியாபாரம் ஒன்றிரண்டு நூற்றாண்டுகளாகத்தான் உலவி வந்த போதிலும் ஆயிரக்கணக்கான வருடங்களாக நிலவிவந்த உங்கள் வியாபாரத்தையும் சம்பத்தையும் கபளீகரித்து உங்கள் பாட்டனார் காலத்தில் ரூபாய்க்கு நாற்பதுபடியாய் நெல்விற்றும் வாங்குவாரில்லாது சீரழிந்துபோய் இன்று ரூபாய்க்கு நாலுபடியாயும் விற்பாரில்லாது திண்டாடவேண்டியகாலத்திற்கு கொண்டுவந்து விட்டதே எத்தனை சிறப்புடைத்தாய்விட்டது. பார்த்தீர்களா. இன்னும் அவர்கள் அறிவையும் வலிமையையும் யாரே எடுத்துரைக்கவல்லார். ஒரு ஆகாய விமானத்தால் ஒரு மாகாணத்தையே வேட்டையாடிச் சூறையாடிக் கொன்றுவிடவல்லதே. ஆகவே இத்தனை பெருமையுடைய ஜனசேவைக்கு நீங்களும் முன்வருவீர்களானால், இத்தனைவலியும் அந்தஸ்தும் கிட்டும் என்று போதித்துப்பாருங்கள். இதுமட்டுமல்ல. இன்னும் எவ்வளவுவேண்டுமென்றாலும் சொல்லிப்பாருங்கள். உடனே அவர்கள் என்ன சொல்வார்கள் என்றால் ஐயா உங்கள் வேதாந்தத்தைக்கேட்க நேரம் எமக்கிப்பொழுதில்லை. என்பசிக்குச் சோறு உங்கள் வேதாந்தம் போடுமா அல்லது என் வீட்டிலுள்ளோர் பசியையாவது தீர்க்குமா. இவற்றைத்தீர்த்தபிறகல்லவா வேதாந்தத்திற்கு வரவேண்டும். வேதாந்திகள் கடவுளைக் கருணைக்கடலென்கிறார்களே. அக்கடவுளும் எங்களுக்குப்பசியாமலிருக்கச் செய்யட்டுமே. ஊராருக்குழைத்து என்னையும் என் குடும்பத்தையும் சந்தியில் அலையவிடவா பார்க்கிறீர்கள். ஊருக்குழைத்தால் ஒருவேளைச்சோறாகிலும் என் பெண்டாட்டிக்கு வருமா எனக்குத்தான் கிட்டுமா. ஊருக்குழைக்க இவர்கள் பசி எங்ஙனம் அடங்கும். இவர்களைப்பசியினால் மடிய விட்டுவிட்டா ஊருக்குழைக்கவேண்டுமென்கிறீர்கள். போதும் போதும் நிறுத்தும் வேறு எவனாவது பித்துக்கொள்ளியிருந்தால் அவனைப்பார்த்துச்சொல்லும். உமக்குதான்

நன்று உபதேசிக்கிறேன். அவ்வுபதேசத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி ஒழுகுவீர்களானால் உமக்கு நல்லது கிடைக்கும். இவ்வாழ்வை மிக இன்பமாக அநுபவிக்கலாம் என்றுசொல்லி "தனக்குமிஞ்சி தானம்" என்ற மந்திரத்தை உபதேசம்செய்து அகல்வர். அவர்களுக்குப் புத்தி சொல்லப்போன நமக்கு அவர்கள் உபதேசம் செய்து விட்டுச் செல்வார்கள். அவர்களுக்குத் தக்க பதில் சொல்ல அசக்தராகவே ஆய்விடுவோம். காரணமென்னவெனில் அவர்கள் சொல்லுவதிலும் ஓர் அநுபவ உண்மையிருக்கிறது. ஆனால் அவ்வுண்மை எங்கு பொருத்தவேண்டுமென்று அறியாமையினாலேயே இவ்வாறெல்லாம் அவர்கள் சொல்லும்படியாயிற்று.

(இன்னும் வரும்).

உ
சிவமயம்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்த விஷயமான

ஓர் வேண்டுகோள்.

புண்ணிய சீலர்களாகிய உத்தம சிகாமணிகளே!

பற்பல தேசத்தார்களும் செவ்வனே கருதிப் பல விஷயங்களிலும் முன்னேற்றமடைந்தும், அடைய முயற்சித்தும் வருவதைப் பலகாலும் அறிந்தும், சென்னை இராஜதானியின் ஓர் பகுதியில் வசிக்கும் நாட்டுக்கோட்டையாராகிய நாம் முன் செல்வோரையேனும் பின்பற்றக்கருதாது மௌனஞ்சாதிப்பது அழகாமோ? காலத்திற்கேற்க நடந்துகொள்ளவேண்டியது அவசியமானதால் சீர்திருத்த முன்னேற்றத்திற்கான ஒற்றுமைகொண்டு சோம்பலின்றிப் பரபரப்புடன் உழைக்க முன்வாராது யாருக்குவந்த விருந்தோவென எண்ணியிருத்தல் சரியாமோ?

சகோதரர்களே! இக்கால இயல்பையும்' ஒவ்வொரு காலின் உலக மாறுதலான நிலைமையையும், நமது தற்கால 'நிலைமையையும் ஆழ்ந்து யோசித்தல் அவசியத்திலுமவசியமாகும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகையினானே",

என்ற மேலோரது திருவாக்கிற்கிணங்க நாம் இப்பர்மா தேசத்தில் பலரும் விரும்பக்கூடிய சௌகர்யமான தலைநகரங்களிலொன்றுவெ ஓர் ஊரில் ஐக்கிய சங்கமாக ஒன்றுகூடி ஆலோசித்துச் சீர்திருத்த முன்னேற்ற விஷயமாக மற்ற தேசத்தாரையொப்ப நாமும் மேன்மை யடைய வேண்டியதையும், புதிய இந்திய சரித்திரத்தில் இடம் பெறவேண்டியதையும் கருதி, சித்தார்த்தி வருடத்தில் அனைவரும் விரும்பக்கூடிய மாதத்தில் ஓர் கூட்டங்கூட்டிப் பலரது அபிப்பிரா யங்களை ஒருமைப்படுத்தவேண்டியதும் அதைப் பிரசித்தஞ்செய்ய வேண்டியதும் முக்கியமாதலின், எந்த இடத்தில் எவரைத் தலைவ ராகக்கொண்டு எந்த மாதத்தில் நடத்தலாமென்பதற்குள்ள தங்கள் தங்கள் அபிப்பிராயங்களையும், அவ்விதக் கூட்டத்தைக்கூட்ட எவ் வித முயற்சி வேண்டுமென்பதையும் இவ்வருடம் பங்குனி மாதம் 30-ந்தேதிக்குள் தெரிவிக்கும்படி செய்யவேண்டுமென ஆவலுடன் எதிர்பார்க்கும்,

டாங்கோ நகரத்தார்கள்.

முக்கிய அறிக்கை:—இதைப்பற்றி விபரம் அறிய விரும்புவோரும் பதில் தெரிவிப்போரும் எமெதின் E. K. S. M. பழனியப்ப செட்டியா ரவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளும்படி கோருகிறோம்.

நாட்டுக்கோட்டை நகர வைசிய சமூகத்தவர்களின்

சீர்திருத்த விளக்கம்.

மஹாமகிமைபெற்ற மஹான்களது நற்குலத்திலவதரித்த நன்மணிகாள்!

நமது ஜாதியார் முற்காலமிருந்த உயர்வான நிலைமையையும் தற்காலமிருந்துவரும் நிலைமைகளையும் சிலருடன்கூடிப் பலவிடம்

களிலும் தெரிவித்துக்கொண்டதின் பயனாக எம் நகரவைசியர்களின் சீர்திருத்தவேண்டுகோளென இப்பர்மியதேய நடுநகரமாகிய டாங்கோ நகரத்தார்களால் இரண்டு மாதங்களுக்குமுன் ஓர் துண்டுப்பிரசுரம் வெளிவந்தது. அதைப் பலவிடங்களிலுமுள்ள பல பெரியார்களுக்கும் நேசர்களுக்கும் அனுப்ப, அதையாவரும் கண்ணுற்றதின்பயனாக இப்பர்மிய தேய நடுநகரமொன்றில் ஐக்கியசங்கமொன்று ஏற்படுத்தி முற்காலமாதிரியான கூட்டுறவுமுறையை அபிவிர்த்திசெய்ய ஆவலிருப்பதாயும், இப்பேர்ப்பட்ட தேசகைங்கரியஞ்செய்யச் சிற்சில தேசோபகாரிகள் சோம்பல் தன்னயமென்னும் என்பன விலக்கித் தைரியலெட்சுமி உதவிகொண்டு முன்வரவேண்டுமெனவும், சீர்திருத்தமென்றால் என்ன என்பதைச்சுருக்கமாகத் தெரிவிப்பின் சீர்திருத்தமென்பதற்கு நூதன அர்த்தமும் துவேஷ எண்ணமுங்கொள்ளாது பலர்கள் அறிந்து ஒத்துழைப்புக் காட்டுவர் என்பதையும் எண்ணியே இரண்டாம்முறையாக இத்துண்டுப்பிரசுரம் வெளியிடலானது.

தற்கால வர்த்தமானங்களையும் உலக மாறுதலென்ற சக்கரச் சுழற்சியையும் ஆழ்ந்து யோஜித்துப் பயன்பெறச்செய்வதற்குத் துணைக்கருவியாயுள்ளது சீர்திருத்தம். சீர்திருத்தமெனில், சீராகிய திருத்தம். அதாவது சீருடன் கூடிய ஒழுங்காவது. ஒழுங்கு என்பது சட்டமாகும். திருத்தமெனில், திருத்திக்கொண்டே வருதல். உலக மாறுதலுக்கு ஏற்ற விதமாகவும் நமது முன்னவர்கள் நடத்திக்காட்டிய நன்மையான பழக்கவழக்கங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் தற்கால இயல்புக்கு ஒப்ப முரணில்லாது கைக்கொள்ளுதல். "சொல்லுதல் யார்க்கு மெளிதாம் அரிதாம் சொல்லியவண்ணஞ் செயல்" நடந்து காட்டல் காட்டி மற்றவர்களைக் கைக்கொள்ளவும் தூண்டுதல்.

திருத்தம் என்பது இரண்டு வகைப்படும். அவையாவன (௧) இப்பர்மிய தேசத்தில் நாமோ (கொண்டுவிலே) வட்டித்தொழில் ஒன்றையே யாவரும் பின்பற்றி வருவதை நாளடைவில் மாற்றி

வர்த்தகத்தொழிலிலும் ஏனைய முறைகளிலும் பயிற்சி பெற்று மேன்மையடையச்செய்தல். மேலும் நமக்கநுகூல பிரதிகூல விஷயங்களை நாம் தாமே யறிந்து கொள்ளவும் தெரிந்து கொண்டவைகளை மேன்மைதங்கிய இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துச் சட்டங்களை திருத்தி யமைக்கும்படி ஆண்டு காலமும் மற்றவர்களைப்போலக் கவுரவமாய் நடந்து கொள்ளுதலுமாகும்.

3, நமது தேசம், சமயம், பாஷை, ஜாதி முதலியவைகளிலுள்ள குறைகளையும் பால்ய பாலிகைகளுக்கு விவாஹம் நடைபெறுகிற விஷயத்தில் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்களையும் பலநாட்களாக அருமபிரயாஸையுடன் மிகச்செட்டாகச்சம்பாதிக்கும் பொருள்களை அனாவஸ்யமான வீண்செலவுகளிலும், போதாக்குறைக்கு நம்ஜாதிக் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடந்துவரும் விஷயத்தில் நம்மைப்பயமுறுத்தி ஏமாற்றிப் பணம் பறிக்கும் விஷயமாயும், அக்கட்டுப்பாட்டினால் பிறர்கள் நம்மை அகௌரவமாக மதித்து வருவதினால் நம்மிடம் செல்வமும் செல்வாக்குமிருப்பதாய் நாம் பெருமை பேசிக் கொள்ளுகிறதாயிருக்கிறதே தவிர, பிறரிடம் சோபிக்கக்கூடாமையாக இருப்பதைப்பற்றியும், இன்னும் பல நன்மையானவைகளையும் அறிந்து கலந்து ஆலோசித்துச் செய்தல். இதுதான் சீர்திருத்தமென்பதும் அதன் விளக்கமென்பதுமாகும்,

ஏ புண்ய சீலர்களே! முயற்சி திருவினையாக்கும் என்ற முதியார் வாக்குப்படி ஒவ்வொரு வகுப்பினரும் ஐக்கியசங்கமென்ற கூட்டுறவுச்சங்கம் ஏற்படுத்திப் பலவழிகளிலும் முன்னேற்றமடைந்து கொண்டிருக்க, நாம் அதனைச்சிந்தியாது இன்னும் வாழ்நாளை வீணாகக்கழித்தல் ஆமோ? தம்மளவில் நன்மையடையவேணுமென்பதை விலக்கி ஏகம் சகோதரத்வம் என்பதை முழுதும் கைக்கொண்டு பரோபகாரார்த்தம் இதம் சரீரம் அதாவது பரோபகாரஞ் செய்யவே தெய்வ தூதர்களால் அனுப்பப்பட்டு வந்தோம். அல்லாது ஒருவருக்கொருவர் உபகாரமில்லாவிடின் இவ்வுலகத்தில் ஒரு விதத்திலும் பிரயோஜனமடைய இயலாதென்பதை எண்ணியும்

எழுமின் விழிமின் கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின் என்ற மேன்மையடைந்த பெரியாரது திருவாக்கியத்தைத் துணையாகவும் உறுதியாகவும் கொண்டு சீர்திருத்தத்திற்கு முக்கியமாய் வேண்டியதான கூட்டுறவுடன் கூடிய ஐக்கியசங்கத்தை ஸ்தாபித்து அதனால் ஏற்படும் நன்மைகளைக் கைக்கொண்டு மேன்மையடையச்செய்ய, இதைப்பார்க்கும் அன்பர்கள் முன்வந்து தங்கள் தங்களால் முடிந்த ஒத்துழைப்புக்காட்ட முன்வரும்படி மிகத்தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்ற திருவள்ளுவர் வாக்கினை நாம் நன்கு கவனிக்கற்பாலதாகும். எம் எண்ணங்களைக்கூடியவிரைவில் பூர்த்தி செய்து வைக்கும்படி எம்மை ஆளவல்ல இறைவனை அனுதினமும் பிரார்த்தித்துக்கேட்டுக்கொள்ளுவோமாக.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
நகர வைசிய அபிமானிகள்.

பர்மா நாட்டுக்கோட்டை நகர வைசியர்களுக்கோர்

நற்குறி.

கண்ணியம்வாய்ந்த புண்ணிய சீலர்களாகிய ரெங்கோன் நகரத்தார்களும் மற்ற அயல் தேசத்தார்களும் இந்திய நன்னாட்டிலுள்ள பற்பல வகுப்பினர்களும் முன்னேற்றமடைவதற்கு அநேக நாட்களாகப்பலவித பிரசார வேலைசெய்து வருவதை ஆலோசித்தும் தங்கள் குறைபாடுகளையும் தங்கட்கு முக்கியம் வேண்டியவைகளையும் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்தும் தங்களையும் மற்ற ஜாதியார்களை யொப்பக் கௌரவமாய் நடத்தும்படி செய்யவேண்டுமெனக்கேட்டுக்கொள்ளவும், அவ்வகுப்பினர்களில் ஒற்றுமை பலப்பட்டு ஜாதிய

திருத்தம் விரைவில் ஏற்படவேண்டுமென்பதை எண்ணியும், டாக்கோ நகரத்தார்களாலும் சீர்திருத்த அபிமானிகளாலும் வெளியிட்ட துண்டுப்பிரசுரங்களின் பயனாக சித்தார்த்தி-ஸூ ஆவணிமீ ௪-க்குச்சரியான (20—8—1919) புதன்கிழமை இரவு 9-மணிக்கு முதல் ரோட்டு நகரத்தார்களின் ஆறறை மேல்வீட்டுக் குகப்பெருமானது சந்நிதானத்தில் ரெங்கோன் நகர வைசியர்கள் ஏகோபித்துத் தங்கள் ஜாதியாருக்கு ஓர் அஸோஷியேஷன் ஏற்படுத்தி, வருகிற தைமாதத்திலிருந்து நடத்திவரவேண்டுமெனத் தீர்மானித்து அதற்கு மூலதனம் பெருந்தொகையாக நகரத்தார் உதவுவதுடன் அவர்களில் சில ஜாதிய அபிமானிகளை நாட்டுப்புறங்களுக்கு, பொருள் தொகுக்கும் பொருட்டுப்போய் வரும்படி அனுப்பியிருக்கின்றனரென்பதைக் கேள்வியுற்று அளவில்லா ஆனந்தங்கொண்டோம். மேற்கண்ட சங்கத்துக்காகப்பொருள் உதவிசெய்ய அபிமானமுள்ள நாட்டுக்கோட்டை நகரவைசிய சிரோமணிகள் ஏமெதின் ஏ. கா. சோம. ஏஜண்டு ஸ்ரீமாந் பழனியப்பசெட்டியாரவர்களுக்கு அனுப்பினால் இச்சங்கத்தின் மூலதனத்தொகுதியில் தவக்கமில்லாது போய்ச் சேர்ப்பிக்கக்கூடும். அவ்வாறாகிய, தற்காலத்துக்கு மிக முக்கியமாக வேண்டியதான ஐக்கியசங்கம் என்ற அஸோஷியேஷனை ஏற்படுத்தி அவ்வகுப்பினருக்குள்ள செல்வம் செல்வாக்குடன் கவர்ன்மெண்டாராலும் மற்ற வகுப்பினர் பலர்களாலும் கௌரவமாய் நடந்துகொள்ளும் கண்காட்சியைக்கூடிய விரைவில் பார்க்கும்படி சர்வரக்ஷகராகிய பரமபதியாகும் பிரபு அனுக்கிரகிப்பாராக.

தனவைசியன்.

பலதிரட்டு.

ராலி பிரதர்ஸ் கம்பெனியார் திண்டுக்கல்லில் நவீன முறையில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப்போகிறார்கள். பருத்தியிலிருந்து கொட்டையை எடுப்பதும், அக்கொட்டையிலிருந்து எண்ணெய்

முதலியன உற்பத்தி செய்வதும் இதன் நோக்கமாகும். இதற்கு ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமான மூலதனம் வைத்து நடத்தப்படுமாம்.

பம்பாயில் 64 லட்சம் ரூபாய் மூலதனத்தில் பல "லிமிடெட்" கம்பெனிகள் ஒரு மாதத்தில் பதிவு செய்யப்பட்டன. அடுத்த மாதத்தில் 22 கோடி ரூபாய் மூலதனத்துடன் 26 கம்பெனிகள் பதிவு செய்யப்பட்டன.

இந்தியாவில் 56 லட்சம் சாதுக்களிருக்கிறார்களென்று கூறப்படுகின்றது. அவர்களுட் பெரும்பான்மையோர் கல்வியறிவென்பது சிறிதுமின்றி வயிறு வளர்ப்பதையே பெரிதாகக்கொண்டு பிச்சையெடுத்து வயிறு வளர்த்துத் தமது வாழ்நாளை வீழ்நாளாகக் கழித்து வருபவர்களாக இருக்கின்றார்கள். இவர்களை நல்வழிப்படுத்தி, அவர்கட்கும் தேசத்தாருக்கும் நன்மையுண்டாகுமாறு செய்தல் வேண்டுமென்னும் கருத்துடையராய் வடமேற்கு எல்லைப்புறத்தில் டேரா இஸ்மேல்கான் என்னுமிடத்திலுள்ள ஜமீன்தார்களுள் ஒருவரான கங்காராம் என்பவர் இந்திய தர்ம திருத்த சங்கம் என்னும் பெயரிய ஒரு சங்கம் ஏற்படுத்த முயற்சிசெய்து வருகின்றார். இந்தச் சாதுக்களை நல்வழிப்படுத்த ஏராளமான கல்விச்சாலைகளேற்படுத்தல் வேண்டுமென்று அவர் யோசனை கூறுகின்றார். 56 லட்சம் சாதுக்களுள் பெரும்பான்மையோர் பிழைக்கும் வகையறியாது சாதுக்களாயிருக்கின்றனர். இவர்களை நல்வழிப்படுத்த வேண்டுமாயின், இவர்களை நாட்டுக்குப் பயன் தருபவராகச் செய்ய வேண்டுமாயின், இவர்கட்குப் போஜனசாலையுடன் கூடிய கல்விச்சாலைகளை ஏற்படுத்தல் வேண்டும். வேறு வழிகளால் அவர்களைத் திருத்துவது அசாத்தியமாகும்.